# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
## (கனடாக் கிளை)

# 05

## ஆண்டு நிறைவு
# சிறப்பு மலர்

**J/KARAINAGAR HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION, CANADA**
**5TH ANNIVERSARY CELEBRATION SUVENIR**

# CLEARREX

WINDOWS & DOORS
MANUFACTURING INC.



**At Clearrex, we serve to homeowners, renovators, builders and dealers.**

**We are located in Burk's Falls and are serving customers throughout Northern Ontario.**

**Contact:**
Mahadevan Balasubramaniam
**Cell: 416-716-7052**

**567, HIGH STREET, BURKS'S FALLS, ONTARIO, P0A 1C0, CANADA**

**TEL: 705 382 9090 FAX: 705 382 0990**

**Email: mo@clearrex.com** **http://clearrex.com**

# DOUBLESEAL INSULATING GLASS LTD.

Manufacturing high performance insulating glass units for commercial and residental use.



**Contact:**
Mahadevan Balasubramaniam
**Cell: 416-716-7052**

**453, SIGNET DRIVE, NORTH YORK, ONTARIO, M9L 1V5, CANADA**

**TEL: 416 742 0146 FAX: 416 742 4593**

**Email: mo@doubleseal.ca**

# யா / காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா




# ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

பிரதம விருந்தினர்:

மருத்துவக்கலாநிதி **இராமலிங்கம் செல்வராஜா** M.D.

மருத்துவக்கலாநிதி **சறோ செல்வராஜா** M.B.B.S.

சிறப்பு விருந்தினர்:

**திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை**

(ஓய்வுநிலை பிரதி நில அளவையாளர் நாயகம்)

## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

20-05-2018

# நூல் விபரம்


| | |
|---|---|
| **நூலின் பெயர்:** | யா / காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் 5வது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர் |
| **தொகுப்பு:** | கனக சிவகுமாரன்<br>மா. கனகசபாபதி |
| **பதிப்பு ஆண்டு:** | 20-05-2018 |
| **வெளியீடு:** | யா / காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா |
| **பக்கங்கள்:** | 78 |
| **நூல் வடிவமைப்பு:** | மா. கனகசபாபதி |
| **அச்சிட்டோர்:** | கிராபிக் லான்ட் |

## Details of Book

| | |
|---|---|
| Name of Book: | J/Karainagar Hindu College Old Students' Association, Canada<br>5th Anniversary Celebration |
| Compiled by: | Kanaga Sivakumaran<br>M.Kanagasabapathy |
| Date of publication: | 20-05-2018 |
| Published by: | Karainagar Hindu College<br>Old Students Association - Canada |
| Number of pages: | 78 |
| Layout & Design: | M. Kanagasabapathy |
| Printed by: | graphicland |







# சமர்ப்பணம்

நூற்று முப்பது ஆண்டுகளைக் கடந்தும் அதனுடைய சீரிளமைத் திறன் குன்றாது திருவுடனும்
பொலிவுடனும் திகழ்ந்து பெரு விருட்சமாக வியாபித்து
விழுதுகள் பரப்பி ஓங்கி உயர்ந்து நின்று மகத்தான கல்விப் பணியாற்றி
தரணி போற்றும் பல சான்றோர்களை வழங்கி
எம்மையெல்லாம் பெருமைப்படுத்தி வருகின்றதும்
எமக்கு கல்வி அறிவினையும்
சமய ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களையும் ஊட்டி
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
காரை.இந்து அன்னையின் பொற் பாதங்களில்
இச்சிறப்பு மலரினைச் சமர்ப்பிப்பதில்
பேருவகையடைகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம், கனடா**

# கல்லூரிப் பண்

## பல்லவி

இராகம் – மிலஹரி

தாய் மலரடி பணிவோம் நம் கல்லூரி
தமிழ் எனும் அமுதினை பருகிட நிலை கொண்ட (தாய்..)

## அனுபல்லவி

உவமையிலாதோர் உமையவள் ஞானத்தை
உண்டருள் மதலையின் உயர் பெயர் தாங்கும் நம் (தாய்..)

## சரணம்

இராகம் – பூபாளம்

அன்றொரு நாட்பல வாண்டுகளின் முன்னர்
அன்புரு நெஞ்சினன் ஆய சயம்புவின்
சிந்தனையின் தவயோகப் பொருளுருவில்
வந்தனை நம்தம்மை வாழ்விக்க மகிழ்வோடு (தாய்..)

இராகம் – அடானா

இன்னிசை யனிந்தனம் பொன்னினம் செல்வியை
இந்தமிழ் சாபையின் ஏந்திழை அம்மையை
கற்பனைத் தேனியை காவிய ரசத்தினை
அற்புதத்தேவியை ஆவியைக் கருணையின் (தாய்..)

இராகம் – சண்முகப்பிரியா

இயலிசை யாயினை பலவித கலைகளும்
ஏந்தியவாணியை விஞ்ஞான சக்தியை
பேணிய பெருந்தவப்பேற்றினை யூற்றினை
மானியல் தமிழ் பாவாய் வாழ்த்துவம் எங்கள் (தாய்..)

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர்

## திரு. தம்பையா அம்பிகைபாகன் அவர்கள்

# வழங்கிய செய்தி



காரை.இந்துவின் பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

பழைய மாணவர் சங்கத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க இவ்விழாவில் உங்கள் அனைவரையும் ஒன்றுசேரச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். காரை. இந்து அன்னையும் அதன் விசுவாசத்திற்குரிய புதல்வர்களும் குதூகலித்து மகிழ்கின்ற நன்னாள் இன்றாகும்.

01-09-2012இல் தோற்றம்பெற்று கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் திருப்புமுனையினை ஏற்படுத்திக் கொண்டு வரலாற்றினை எழுதிவருகின்ற காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை கடந்த ஐந்து ஆண்டுகளில் பாடசாலையின் வளர்ச்சி நோக்கியும் அதன் கீர்த்தியை மேன்மையடையச் செய்தும் ஆற்றிய பணிகள் வியக்கத்தக்க உன்னதமானவையாகும். கல்லூரியின் முன்னேற்றத்தில் எமது சங்கத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதாக பாடசாலைச் சமூகம் தமது மகிழ்ச்சியையும் மன நிறைவினையும் வெளிப்படுத்தியுள்ளமை குறித்து கனடா வாழ் பழைய மாணவர்கள் நிச்சயமாகப் பெருமைகொள்ளமுடியும்.

பல்வேறு சிறப்பு மிக்க பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கும் எமது பாடசாலை அன்னையின் இசைப் பாரம்பரியம் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். ஈழத்தின் புகழ்பூத்த பல இசைக் கலைஞர்களையும் இசை ஆசிரியர்களையும் இப்பாடசாலை தந்துள்ளது. அந்தவகையில் கடந்த காலத்தில் மூன்று இசை நிகழ்ச்சிகளை உங்களுக்காக வழங்கிய நாம் இன்றைய வரலாற்றுச் சிறப்புப் பொருந்திய 5வது ஆண்டு நிறைவு விழாவில் மீண்டும் ஓர் இசை நிகழ்வாக இசை ரசிகர்களின் அபிமானத்தினைப் பெற்ற சுப்பர் சிங்கர் ஷ்ரவணின் அற்புதமான இசைக் கச்சேரியை ஒழுங்கமைத்துள்ளோம். இதனை சுவைத்து இன்புறுமாறு வேண்டிக்கொள்வதுடன் எமது சங்கத்தின் பணிகளுக்கு கல்லூரி அன்னை மீதான நன்றி உணர்வுடன் ஈடுபாடுகாட்டி உதவிய அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் இதம்கனிந்த நன்றியை கூறிக்கொண்டு வாழ்க இந்துக் கல்லூரி! வளர்க அதன் புகழ்! பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் பணிகள் தொடர்க! என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**தம்பையா அம்பிகைபாகன்**
தலைவர்

# நிர்வாக சபையின் செய்தி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், சைவ சமயப் பாரம்பரியம் கட்டிக் காக்கப்பட்டு தமிழ்க் கலாசாரமும் பேணப்பட்டு காரைநகர் மக்கள் கல்வியால் உயர்ந்து விளங்கவேண்டும் என்ற பெரு வேட்கையுடன் காரைநகர் மகான் சிவத்திரு.ச. அருணாசலம் உபாத்தியாயரின் எண்ணத்தில் கருக்கொண்டு 1888ஆம் ஆண்டு சிறிய ஓலைக்கொட்டில்களில் ஸ்ரீமான் முத்து சயம்பு அவர்களை முதலாவது தலைமை ஆசிரியராகக் கொண்டு சைவ ஆங்கிலப் பாடசாலையாகத் தோற்றம் பெற்றதே தற்போது காரைநகர் இந்துக் கல்லூரி என அழைக்கப்படும் எமது பாடசாலையாகும். வித்தாகி முளையாகி வளர்ந்து வருகின்ற மாபெரும் கல்வி விருட்சத்தின் விழுதுகளில் ஒன்றுதான் ஐந்து ஆண்டுகள் அகவையுடைய பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையாகும்.

கனடா வாழ் இந்து அன்னையின் புதல்வர்கள் அன்னைமீது கொண்டுள்ள அதீத பற்றுறுதியும் அதன் காரணமாக எழுந்த அன்னையை செழுமைப்படுத்தி அதன் கீர்த்திக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்ற தணியாத வாஞ்சையும் இதனைப் புரிந்துகொண்டு செயலாற்றிய கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு.பொன். சிவானந்தராஜா அவர்களின் உறுதியான செயற்பாடும் இவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய தாய்ச் சங்கத்தின் முன்னாள் போசகர் திரு.S.K.சதாசிவம் அவர்களின் ஒத்துழைப்பும் கனடா மண்ணில் இச்சங்கத்தின் உருவாக்கத்திற்கு அடிகோலியது. 01-09-2012இல் கனடா ஸ்ரீசத்திய சாயிபாபா மண்டபத்தில் நூற்றுக்கணக்கான காரை.இந்து அன்னையின் புதல்வர்கள் சமூகமளித்திருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கூட்டத்தில் உருவாக்கம் பெற்ற பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் திருப்புமுனையினை ஏற்படுத்தியிருந்ததாகவே கருதப்பட்டது. இதனை உறுதிசெய்யும் வகையில் இச்சங்கமானது வீறு நடைபோட்டு அனைவரும் வியக்கும் வண்ணம் கல்லூரியின் வளர்ச்சிக்கு கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மகத்தான பணிகளை ஆற்றி வரலாற்றுப் பெருமையை தேடிக்கொண்டது. எமது சங்கம் எத்தகைய கருமத்தினை எடுத்துக்கொண்டாலும் அதனைச் சீரியமுறையில் திட்டமிட்டு ஒற்றுமையுடன் ஒருங்குசேர உழைத்து வெற்றிகரமானதாக அமைத்துக்கொண்டது. இது இந்து அன்னை எமக்கு வழங்கிய வளங்களில் ஒன்றாகும் என்பதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் முக்கியமானதாக சமூகம் கொள்ளப்படுகிறது. சமூகம் மாணவர்களது கல்வியில் அக்கறை காட்டும்போது கற்றலில் அக்கறையுடன் ஈடுபாடுகாட்டுவர். அர்த்தம் பொதிந்த இந்தக் கோட்பாட்டினையும் 'உனக்கு நீயே உண்மையாய் இரு' என்கின்ற கல்லூரியின் உன்னதமான மகுட வாசகத்தினையும் மனதில் நிறுத்திய எமது சங்கத்தின் அக்கறையான செயற்பாடானது கல்லூரியை பயனுறிதியுள்ளதும் வினைத்திறன் மிக்கதுமான பாடசாலையாக மாற்றுவதில் வெற்றிகண்டு வருவதாகவே கல்லூரிச் சமூகத்தினாலும் காரைநகரின் கல்வியாளர்களினாலும் கருதப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாகவிருந்து கடந்த நிர்வாகங்களில் இடம்பெற்று உழைத்த தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள், நெறிப்படுத்திய போசகர்கள், தயங்காது உதவிய பழைய மாணவர்கள், தாராள சிந்தையுடன் உதவிய அனுசரணையாளர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நாம் சிரம் தாழ்த்தி நெஞ்சார்ந்த நன்றியை இத்தருணத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இச்சங்கத்தினை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தது மட்டுமல்லாது அதன் முதலாவது தலைவராகவும் பணியாற்றி சங்கத்தின் வளர்ச்சியை நேர்த்தியாக நகர்த்திச் செல்வதற்கான அடித்தளத்தினை

இட்டவரான கல்லூரியின் முன்னைநாள் உப அதிபர் அமரர் தம்பிராசா மாஸ்டர் அவர்களையும் நன்றியுடன் இத்தருணத்தில் நினைவுகூருகின்றோம். எமது உதவிகள் சார்ந்து சிறந்த முறையில் ஒத்துழைத்த முன்னைநாள் அதிபரான திருமதி வாசுகி தவபாலன் அவர்களுக்கும் எம்முடன் நெருக்கமான தொடர்பில் இருந்து சிறந்த பணியாற்றி வருகின்ற தற்போதய அதிபரான திருமதி சிவந்தினி வாகீசன் அவர்களுக்கும் இக்காலப்பகுதியில் அமைந்திருந்த தாய்ச் சங்க நிர்வாகிகளுக்கும் இதங்கனிந்த நன்றியினைக் கூறிக்கொள்வதில் மன நிறைவடைகின்றோம். எமது சங்கத்தின் இணையத்தளமாகிய karaihinducanada.comஇன் பரிணாம வளர்ச்சியும் சங்க வளர்ச்சியிலும் கல்லூரியின் புகழை மேலோங்க வைப்பதிலும் இதன் பங்களிப்பும் போற்றுதற்குரியதாகவுள்ளது. அந்தவகையில் இதனை நிர்வகித்து வருகின்ற திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் அவர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

காரை. மண்ணின் முதன்மைப் பாடசாலையான காரை.இந்துவின் வளர்ச்சி ஒன்றே எமது நோக்கு என்கின்ற இலட்சிய பற்றுறிதியுடன் பயணித்து வருகின்ற எமது சங்கமானது அனைத்துக் காரை அமைப்புக்களுடனும் நேச உறவு பேணப்பட்டு பரஸ்பர ஒத்துழைப்புடன் செயலாற்றுவதே ஆரோக்கியமாக அமையக்கூடியது என்கின்ற நிலைப்பாட்டினை உறுதியோடு பின்பற்றி வருகின்றது. இதனை ஏனைய காரை அமைப்புக்களும் புரிந்துகொண்டு பரஸ்பரம் ஒத்துழைத்து வருகின்றமை எமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது. கனடா-காரை கலாசார மன்றத்தின் கடந்த நிர்வாகங்கள் நல்லுறவினைப் பேணிவந்த போதிலும் துரதிஷ்டவசமாக மன்றத்தின் தற்போதய நிர்வாகம் மட்டும் இவ்விடயத்தில் தயக்கம் காட்டிவருவது வருத்தமளிப்பதாகவுள்ளது. ஆனாலும் அவர்களும் தமது நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு நல்லுறவினைப் பேணுவதற்கு முன்வருவார்கள் என்பது காரை மண்ணை உளமார நேசிக்கின்ற அனைவரதும் நம்பிக்கையாகும்.

நிறைவாக வரலாற்றுப் பெருமை மிக்கதும் இந்து அன்னையை பேருவகை கொள்ள வைக்கின்றதும் ஆகிய 5வது ஆண்டு நிறைவு விழாவானது பழைய மாணவர்களுக்கு கல்லூரி அன்னை மீதான ஈடுபாட்டினை அதிகரித்து வைப்பதாக அமைந்து விளங்கும் என நம்பும் நாம் எதிர்வரும் காலங்களில் அமையும் நிர்வாகங்களும் உங்களது பேராதரவுடன் பணிகளை நிறைவோடு முன்னெடுக்கவும் எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் உறையும் சுந்தரேசப்பெருமானின் திருவருளை வேண்டி விடைபெறுகின்றோம்.

**நிர்வாக சபை**

**பழைய மாணவர் சங்கம் - கனடா**

20-05-2018

‘TO THINE OWN SELF BE TRUE”

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# J/KARAINAGAR HINDU COLLEGE
## பழைய மாணவர் சங்கம்
## OLD STUDENTS ASSOCIATION

Tel: 0212211722 E-mail: karaihindu@gmail.com

கல்லூரி அதிபர்

## திருமதி சிவந்தினி வாகீசன் அவர்கள்
# வழங்கிய வாழ்த்துரை



சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற காரையம் பதியிலே இற்றைக்கு 129 ஆண்டுகளுக்கு முன்னர் மதிப்பிற்குரிய முத்து சயம்பு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இன்று காரைநகர் இந்துக் கல்லூரி என விளங்கும் எமது கல்லூரிச் சமூகம் கல்விசார் புலமைபெற்ற பலரை உருவாக்கியுள்ளது, உருவாக்கிவருகின்றது. தீவகக் கல்வி வலயத்தில் தனக்கென ஒரு ஸ்தானத்தை நிலைநாட்டி வருகின்றது.

பாடசாலைச் சவால் ஒவ்வொன்றுக்கும் பழைய மாணவர்கள் குறிப்பாக புலம்பெயர் பழைய மாணவர்கள் பக்கத் துணையாக இருந்துவருகின்றனர். இவர்களது பங்களிப்பு பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த சிந்தனையின் அடிப்படையில் கனடாவாழ் பழைய மாணவர்களின் ஒன்றிணைந்த கடும் முயற்சியின் பயனாக 2012ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் பல தடங்களை ஏற்படுத்தியவண்ணம் வரலாறு படைத்து பயணித்து வருவது கண்டு பேருவகையடைகின்றோம். இச்சங்கத்தினது அளவிடற்கரிய உதவிகளினால் பாடசாலை துரித வளர்ச்சியடைந்து வருகின்றது எனக் கூறினால் மிகையாகாது. பன்னிரண்டு ஆண்டுகளிற்குப் பின்னர் க.பொ.த.பரீட்சையில் இரு மாணவர்கள் 9A தர சித்தியையும் ஒரு மாணவன் 8A, B தர சித்தியையும் பெற்றுள்ளமை இத்தருணத்தில் குறிப்பிடக்கூடியதாகும். அதுமட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற வகையில் பல்வேறு சாதனைகள் ஏற்படுத்தப்பட்டு அனைவராலும் போற்றப்படுகின்ற பாடசாலையாக திகழ்கின்றது. நேரிலும் தொலைபேசி மூலமாகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி ஆக்கமும் ஊக்கமும் தந்து செயலாற்றிவருகின்ற இச்சங்கத்தின் நிர்வாகிகளையும் உதவிவருகின்ற கனடா வாழ் பழைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

தமது அயராத உணர்வுபூர்வமான உழைப்பினால் பரிணாம வளர்ச்சியைப் பெற்று வருகின்ற இச்சங்கம் 5வது ஆண்டு நிறைவினை கோலாகலமாக கொண்டாடுவது குறித்து நாமனைவரும் பேருவகையடைகின்றோம். இச்சங்கத்தின் 5வது ஆண்டு விழா உன்னதம்பெற்று பாடசாலையின் புகழை ஓங்கச்செய்வதுடன் “இன்னிசை அணிந்த நம் பொன்னிழும் செல்வியை”என்னும் கல்லூரித் தாயின் கீதத்திற்கமைய இனிமையான இசையினை பருகிட நினைத்த கனடாவாழ் கல்லூரியின் மைந்தர்கள் இவ்விழாவில் ஒழுங்கமைத்துள்ள சுப்பர் சிங்கர் R.P ஷ்ரவணின் கர்நாடக இசைக் கச்சேரியானது செவிக்கு இனிமை தந்து மனதிற்கு மகிழ்வூட்டி சிறப்புற நடைபெறவும் எமது பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தங்களது பணி மேன்மேலும் தொடர எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் இறைவனை வேண்டுகின்றேன்

**திருமதி சிவந்தினி வாகீசன்**
அதிபர்

*With Best Compliments*

*From*

**Dr. Ramalingam Selvarajah, M.D.**

**Dr. Saro Selvarajah, M.B.B.S.**

**Springfield, Ohio,**

**U. S. A.**

**TEL: 937 390 3226**

OLYMPIC
WOOD WORK INC.



KITCHEN STYLES KITCHEN ACCESSORIES CABINET DOORS
COUNTERTOP CHOICES OTHER ROOMS COMMERCIAL
BATHROOM RENOVATIONS RENOVATIONS CERAMIC TILES

OLYMPIC WOOD WORK INC.

1360, BIRCHMOUNT ROAD, UNIT 4, SCARBOROUGH, ON. M1P 2E3

Tel: 416-483-3700, Cell: 416-827-9290, Fax: 416-752-2700

karunaolympicwood@yahoo.ca wwww.olympicwoodwork.ca

OLYMPIC
DEVELOPMENTS

Welcome
To your Dream Home custom build
& custom renovation Builder



OLYMPIC DEVELOPMENTS

1360, BIRCHMOUNT ROAD, UNIT 4, SCARBOROUGH, ON. M1P 2E3

Tel: 416-483-3700, Cell: 416-827-9290, Fax: 416-752-2700

karunaolympicwood@yahoo.ca wwww.olympicdevelopments.ca


With the best wishes
from
Bala Maheswaran, B.Sc. Eng.(Hons), MSEE
Diploma in Computer Programme & Data Processing
General Manager, Train Control Office Products
Electronics Group
Wabtec Corporation
Fort Worth, TX 76177
Mohana Maheswaran, MBA, MSEE, BSEE
Principal Electrical and System Engineer
Pasadena, CA, U.S.A.

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் 5வது ஆண்டு நிறைவு விழாவின் பிரதம விருந்தினராக நானும் எனது மனைவியும் கலந்து கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்புக் குறித்து இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற வகையில் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

வசதியுள்ளவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடிச் சென்று வரும் நிலையில் 'எல்லோர்க்கும் கல்வி' என்கின்ற உயரிய கல்விக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தும் பெரும் பணியினை கிராமப்புறப் பாடசாலைகளே ஆற்றி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இத்தகைய பாடசாலைகளுள் 130 ஆண்டு காலத் தொன்மையும் மேன்மையும் பெருமையும் மிக்க கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு வியத்தகு கல்விப் பணியாற்றி வருகின்ற முன்னணிப் பாடசாலையாக காரைநகர் இந்துக் கல்லூரி விளங்குவது எமக்கு பெருமையளிக்கக் கூடிய செய்தியாகும். தன்னலங் கருதாது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஆகியோரையும் ஒத்துழைத்து உதவிய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரையும் இத்தருணத்தில் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று மலேசியா நாட்டிற்குச் சென்று குடியேறிய பழைய மாணவர்கள் அறுபது ஆண்டுகளிற்கு முன்னர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி முன்னுதாரணத்தினை ஏற்படுத்தியிருந்தனர். இதனைப் பின்பற்றி கனடாவில் வாழும் இந்து அன்னையின் புதல்வர்கள் பழைய மாணவர் சங்கத்தினை நிறுவி அதனூடாக கல்லூரி அன்னைக்கு அளப்பரிய உதவிகளைச் செய்து வருவது விதந்து பாராட்டப்படவேண்டியதாகும். இச்சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா பொலிவுபெற்று விளங்கவும் அதன் மகத்தான பணிகள் தொடரவும் நானும் எனது மனைவியும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மருத்துவக்கலாநிதி இ. செல்வராஜா**
**மருத்துவக்கலாநிதி சறோ செல்வராஜா**

# சிறப்பு விருந்தினர்

## திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா தனது ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடிடும் இந்நாட்களில், எமது சங்கத்தின் ஆரம்பத்தையும், ஐந்து ஆண்டுகளில் ஆற்றிய சேவைகளையும் அதன் வளர்ச்சியையும் எண்ணிப் பெருமிதமடைகின்றேன்.

சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் விவசாயம், வியாபாரம், மீன்பிடித்தொழில், அரசாங்க உத்தியோகம் ஆகியவற்றில் தங்கியிருந்த எம்மூர் (காரைநகர்) மக்களில் படித்த சிலர் மலேசியாவுக்கு வேலைவாய்ப்புத் தேடி குடி பெயர்ந்தார்கள். அவர்கள் தாம் பிறந்த ஊரையும் படித்த கல்லூரியையும் மறவாமல், தம் ஊருக்கும் உறவினர்களுக்கும் உதவிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் உதவியால் ஓலைக் கொட்டில்களாக இருந்த எம் கல்லூரி வகுப்பறைகள் பல ஓட்டுக் கட்டிடங்களாக மாற்றம் பெற்றன.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின் 1956இல் சிங்களம் மாத்திரம் சட்டம் இயற்றப்பட, தமிழர்கள் அரசாங்க சேவையில் புறக்கணிக்கப்பட்ட நிலையில், நன்றாகப் படித்த தமிழர்கள் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கும் குடிபெயரத் தொடங்கினர்.

1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாகவும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் தாம் பிறந்த நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படியாக இடம்பெயர்ந்து கனடாவில் குடியேறிய ஆயிரக்கணக்கான காரைநகர் மக்கள் தாம் பிறந்த காரைநகர் மண்ணை மறக்காமல் தம் ஊருக்கும் அங்கிருக்கும் மக்களுக்கும், ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனை போன்றவற்றிற்கும் உதவி செய்யும் நோக்கில் ஒரு அமைப்பை சுமார் 27 வருடங்களுக்கு முன் நிறுவி இன்றும் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில், கனடா வாழ் காரைநகர் மக்களிடமிருந்தும் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களிடமிருந்தும் கல்லூரித் தேவைகளுக்குப் போதிய நிதி உதவி கிடைப்பதில்லை என்ற குறை பாடசாலைச் சமூகத்தின் மத்தியில் இருந்து வந்துள்ளது. காரைநகருக்கான பொது அமைப்பினால், இந்துக் கல்லூரிக்கென தனிப்பட்ட முறையில் கூடிய அளவில் உதவிகள் செய்ய முடியாத நிலையில், இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் தற்போது கனடாவில் வசிப்பதால், அவர்கள் பழைய மாணவர் சங்கக் கிளையொன்றை அங்கு அமைத்து தாம் படித்த கல்லூரிக்கு உதவி செய்யவேண்டும் என்ற வேண்டுகோள் காரைநகரில் இருந்து பள்ளிக்கூடச் சமுகத்தால் விடுக்கப்பட்டது. இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட காரை இந்துவின் பழைய மாணவர்களினால் 2011 □ 2012 ஆண்டுகளில் ஆலோசிக்கப்பட்டு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பழைய மாணவர்களின் பேராதரவுடன் தொடங்கப்பட்டதுதான் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையாகும்.

இச்சங்கத்தின் ஆரம்பகாலத் திட்டமிடலில் தம்பிராசா மாஸ்டர், கனக சிவகுமாரன், ஆறுமுகம் சோதிநாதன், திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன், கந்தப்பு அம்பலவாணர் ஆகியோருடன் இணைந்து பங்குபற்றியவன் என்ற வகையிலும், எம் சங்கத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் போசகராகவும் பின்னர் தலைவராகவும் பணியாற்றியிருந்தவன் என்ற வகையிலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் எம் சங்கம் கல்லூரித் தேவைகளில் அதிகளவு பங்கு பற்றித் பூர்த்தி செய்திருக்கிறது என்ற வகையிலும் எனது வயது முதிர்ச்சி உடல் நிலை காரணமாக சங்கத்தின் முக்கிய பதவிகளில் இருந்து விலகி இருக்கவேண்டிய நிலையிலும் இப்போதும் எம் சங்க நடவடிக்கைகளை தூர இருந்து கண்காணித்துக் கொண்டே இருக்கிறேன் என்ற வகையிலும் பெருமை அடைகின்றேன்.

1948 - 1955 ஆம் ஆண்டுகளில் எம் கல்லூரி எனக்கு அளித்த படிப்பறிவுதான் 1956 - 1999 ஆண்டுகளில் அரசாங்க சேவையில் ஈடுபடச் செய்து, என் வாழ்க்கையில் என்னை முன்னேற்றியது என்பதை நினைத்துப் பூரிப்படைகின்றேன்.

எமது பழைய மாணவர் சங்கம் மேலும் செழிப்புற்று கலலூரிக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்யவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மு. வேலாயுதபிள்ளை
ஓய்வுபெற்ற பிரதி நில அளவை அதிபதி

**யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும்**

**கல்லூரியின் பழைய மாணவனுமாகிய**

**கலாநிதி வே. தர்மரட்ணம் வழங்கிய**

# ஆசியுரை



கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பழைய மாணவர் சங்கக் கிளையை நிறுவி ஐந்து ஆண்டுகள் சேவையாயற்றி வருவதையிட்டும் ஐந்தாண்டு நிறைவு விழா நடைபெறுவதையிட்டும் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்வியை ஊட்டி வளர்த்த கல்லூரித் தாயை நினைவு கூர்ந்து காலமறிந்து இடமறிந்து ஆரோக்கியமான பணிகளை செயலில் காட்டி வருவதைக் கேள்வியுற்று பெருமையடைகின்றேன்.

மேலும் பணிகள் தொடர கல்லூரி சிறப்புற்று ஓங்க ஐந்தாண்டு நிறைவு விழா சிறப்புற ஆசீர்வதிக்கின்றேன்.

**வே. தர்மரட்ணம்**
வாழ்நாள் பேராசிரியர்
யாழ். பல்கலைக்கழகம்.

## கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளை கருக்கொள்ள அடிகோலியவருமான திரு. பொன். சிவானந்தராஜா வழங்கிய

# வாழ்த்துரை



காரைநகர் இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தினர் வெளியிடும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் முதலில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தினை பெரும் பேறாகக் கருதி மகிழ்கின்றேன்.

நேற்றுப்போல இருக்கிறது. கனடா பழைய மாணவர் சங்கத்தினுடைய தோற்றத்தையும் வளர்ச்சியையும் நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியம் அகல விரிகின்றது. ஐந்து வருடங்கள் என்பது எண்களின் ஆரம்பம் தான். ஆனால் பலபேர் கூடி சங்கம் அமைத்து வெளிப்படையான உண்மைத் தன்மையுடன் எல்லோரும் ஒருநேர் கோட்டில் ஒன்று கூடி நகர்த்திச் செல்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

இச் சங்கத்தினுடைய பிரசவத்திற்கு வேராய் இல்லாவிட்டாலும் விழுதாய் இருந்தவன் என்ற உரிமையோடு ஒன்றுமட்டும் கேட்கின்றேன். இம்மலரின் பிரசவம் வருடந்தோறும் வேண்டும். உங்கள் தொடர் சேவைகளின் பதிவுகளால் பல பழைய மாணவர்களின் நினைவுகளாய் தொடரவேண்டும்.

இச் சங்கத்தின் ஆரம்பத் தொட்டில் தங்கத்தால் கட்டப்பட்டு செங்கம்பளம் விரிக்கப்பட்டது அல்ல. மாறாக தடைக்கற்கள் போடப்பட்டு தொடர் இடர்கள் கொடுக்கப்பட்டதே.

காய்க்கும் மரத்திற்குத்தான் கல்லெறிவிழும் என்பர். ஆனால் காய்க்கப் போகின்ற மரம் கல்லெறிவேண்டிய கதை கனடா பழைய மாணவர் சங்கத்திற்கே உரியது.

தடைக் கற்களையே படிக்கற்களாக்கி விமர்சனங்களை விமோசனங்களாக ஏற்று வீரியம் கொண்டு விருட்சமாகி நிற்கும் இச்சங்கத்தைக் கண்டு அன்று எதிர்த்து எழுந்தவர் எல்லோரும் இன்று எழுந்து அணைத்தே நிற்கின்றனர். இப்போது மட்டுமல்ல இனி எப்போதும் எம் கல்லூரித் தாயின் கல்வி வளர்ச்சியில் உங்கள் பங்கு தொடர்ந்தே வளரட்டும் என்று வேண்டி இம் மலருக்கு வாழ்த்துக்களை இதயசுத்தியோடு கூறிக்கொள்கிறேன். கல்லூரிக்கும் அப்பால் உங்களை தன்மடிமீது சுமந்த எம் ஊர்த் தாய்க்கும் உங்கள் சேவைவேண்டி, ஆன்மீகத்மையும் தொட்டு அது வளரவேண்டும் எனக் கேட்டு எனது வாழ்த்துரையை நிறைவுசெய்கின்றேன்.

வளர்க எம் கல்லூரி அன்னை
வாழ்க காரை இந்துக் கல்லூரி

**பொ. சிவானந்தராஜா**
முன்னாள் அதிபர், காரைநகர் இந்துக் கல்லூரி
முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர், வேலணை

# காரைநகர் இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் வாழ்க நீடூழி!



"தாய்மலரடி பணிவோம் – நம் கல்லூரி
தமிழெனும் அமுதினைப் பருகிட நிலைகொண்ட ..........""

எனும் கல்லூரித் தாயின் கீதத்திற்கமைய தித்திக்கும் அமுதினைப் பருகித் திளைத்த கனடா வாழ் கல்லூரியின் புதல்வர்கள் அணிதிரண்டு 2012 புரட்டாதித் திங்களில் கால்கோளிட்ட பழைய மாணவர் சங்கம் இன்றுடன் ஐந்தாண்டு அகவையைப் பூர்த்திசெய்யும் இந்நன்னாளில் பல்லாண்டு வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ் ஐந்து வருட காலத்துள் கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரி வளர்ச்சிக்காக மகத்தான பங்களிப்பை வழங்கியமையால் கல்லூரி துரிதகதியில் வளர்ச்சிகண்டு வலயம், மாகாணம், தேசியம் என்ற வகையில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி இலங்கைத் திருநாட்டின் பேசப்படும் ஒரு பாடசாலையாக தடம் பதித்துள்ளது என்றால் மிகையாகாது.

அவ்வகையில் முதன்முதலில் சங்கத்தை தலைமை தாங்கி நெறிப்படுத்திய திரு.தம்பிராசா மாஸ்ரர், அதனைத் தொடர்ந்து திரு.த.அம்பிகைபாகன், திரு.மு.வேலாயுதபிள்ளை ஆகியோரும், செயலாளர் திரு.கனக சிவகுமாரன், பொருளாளர்களாக செயற்பட்ட திரு. பிரகலாதீஸ்வரன், திரு. மா. கனகசபாபதி ஆகியோரும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் சங்கத்தை சீரியமுறையில் செயற்படுத்தி கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்கள். குறிப்பாக செயலாளர் திரு.கனக சிவகுமாரன் அவர்களும் பொருளாளர் திரு.மா.கனகசபாபதி அவர்களும் தொலைபேசி மூலமாகவும், நேரிலும் பாடசாலையுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி கல்லூரி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியவண்ணம் இருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக கனடா வாழ் காரை மக்களின் ஒத்துழைப்பும் அனுசரணையும் அளப்பரியது என்றே கூறவேண்டும். சங்கத்தின் போசகர்களாகச் செயற்பட்ட திரு.தி.விஸ்வலிங்கம், திரு.வேலாயுதபிள்ளை ஆகியோர் சங்கம் நெறிமுறைதவறாது செயற்பட உரிய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கியமையும், இணையத்தளத்தின் நிர்வாகி திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் அவர்கள் பாடசாலை மற்றும் சங்க நிகழ்வுகளை உடனுக்குடன் இணையத்தளத்தில் தனக்கேயுரிய சிறந்த விமர்சனக் கண்ணோட்டத்தில் பிரசுரித்து கல்லூரியின் சாதனைகளை பறைசாற்றியதுடன் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் உறுதுணைபுரிந்தார். இச்சந்தர்ப்பத்தில் கனடா பழைய மாணவர் சங்கம் கருக்கொள்ள அடிகோலிய அன்றைய தாய்ச்சங்கப் போசகர் திரு.எஸ்.கே.சதாசிவம் அவர்களையும், அன்றைய அதிபர் திரு.பொ. சிவானந்தராஜா அவர்களையும் மறக்கமுடியாது.

சங்கத்தினால் மேலதிக மின்கட்டணம், மேலதிக தொலைபேசிக் கட்டணம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான நிதிஉதவிமுதல் பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கான காணிக் கொள்வனவு, மாணவர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் எனப் பல்வேறு பரிமாணங்களில் பாடசாலைச் செயற்பாடுகளுக்கான அனுசரணைகளை வழங்கியவண்ணம் இருந்தார்கள். அவ்வகையில் கனடா பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்லூரியானது அபிவிருத்தி நோக்கி வீறுநடைபோட தம்மாலான பூரண ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தார்கள்.

அவ்வகையில் கல்லூரியின் அக்காலப் பகுதி அதிபர் என்றவகையில் கல்லூரியை சிறப்பாக அபிவிருத்திப் பாதையில் முன்னகர்த்த உறுதுணைபுரிந்த கனடா பழைய மாணவர் சங்கத்திற்கு நன்றிகளையும், அவர்களது மகத்தான சேவைக்கான பாராட்டுக்களையும் வழங்குவதுடன் கல்லூரி அன்னை வாழும்வரை சங்கமும் சிறப்புடன் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**திருமதி வாசுகி தவபாலன்**
முன்னாள் அதிபர், காரைநகர் இந்துக் கல்லூரி

## கல்லூரியின் முன்னாள் அதிபர்

# திருமதி தவநாயகி பாலசிங்கம் அவர்களின் *வாழ்த்துரை*



காரைநகர் இந்துக் கல்லூரியின் கனடாக் கிளை பழைய மாணவர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவாக வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமையடைகிறேன்.

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்பது அருளாளர் வாக்கு

மனிதப்பிறவி எடுத்தவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பல. அதில் முக்கியமானது மதத்தினதும் இனத்தினதும் கடமைகளை ஒழுங்காக ஆற்றுவதாகும். அந்த வகையில் கண்ணியமும் கட்டுப்பாடும் மிக்க காரைநகர் மண்ணிலிருந்து அருணாசல உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்பட்டு தொன்மைமிகு இந்து சமயப் பண்பாட்டு விழுமியங்களை வழங்கி பல கல்விப் பெருந்தகைகளை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தைப் பொலிவுறச் செய்யும் கலைக்கோயிலான இந்துக் கல்லூரி பல லட்சம் ஆண்டுகள் நிலைத்து வாழும். அந்த வகையில் பெருமையுற்று விளங்கும் கல்லூரியை மேலும் வளப்படுத்த இக் கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து அபிவிருத்திப் பணியைச் செய்து வருவதையிட்டு பெருமைப்படுவதோடு அவர்களின் பணி ஈழத்துச் சிதம்பர ஐயனாரின் அருளினால் சிறப்புற வாழ்துகின்றேன்.

**திருமதி. த. பாலசிங்கம்** B.Sc. Zoology special, PhDE, PGDE, M.A. in Teacher Education

முன்னாள் அதிபர் - இந்துக் கல்லூரி காரைநகர்

ஓய்வுநிலை உதவிப் பரீட்சை ஆணையாளர்

அதிபர் - சைவமங்கையர் வித்தியாலயம் கொழும்பு -06

'TO THINE OWN SELF BE TRUE"

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# J/KARAINAGAR HINDU COLLEGE
## பழைய மாணவர் சங்கம்
## OLD STUDENTS ASSOCIATION

Tel: 0212211722 E-mail: karaihindu@gmail.com

### கல்லூரியின் முன்னாள் அதிபரும் தாய்ச் சங்கத்தின் உப தலைவருமாகிய

# பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்களின் வாழ்த்து



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானிலும் நனி சிறந்தனவே"

"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி" என்றார் கவிக்குயில் பாரதியார்

காரைநகர் இந்துக் கல்லூரி 130 ஆண்டுகளைக் கடந்து தளராது மிக நீண்ட காலம் கல்விப் பணியாற்றி வருகின்றது. காரைநகரில் முதன்மைப் பாடசாலையாக என்றும் விளங்கி வருகின்றது. இவ்வாண்டும் உயர்ந்த சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது. இக் கல்லூரியின் உயர்வில் பங்கேற்க வேண்டிய பாரிய பொறுப்பு இக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் உரியதாகும்.

இதன் அடிப்படையில் கொழும்பு வாழ் பழைய மாணவர்கள் சங்கம் அமைத்து கல்லூரியை வளர்க்க முன் வந்தது போல கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு சங்கம் அமைத்து பணியாற்றத் தொடங்கினர். கனடா வாழ் பழைய மாணவர்களின் பகீரதப் பிரயத்தனத்தினால் உருவாக்கப்பட்ட இச்சங்கத்தால் கடந்த ஐந்தாண்டு காலத்திலும் கல்லூரி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன.

கனடாக் கிளைச் சங்கத்தின் மூலம் ஆங்கில விசேட வகுப்புக்கள், பாடசாலை தவிர்ந்த நேரங்களில் கற்கும் மாணவர்களுக்கு சிற்றுண்டி வசதிகள், பற்றாக்குறை ஆளணி குறைபாட்டை நீக்க நிதிவசதிகள், வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு நிதி ஏற்பாடு, பலரிடம் இருந்து நினைவுப் பரிசில்கள் பெற்று வழங்கல், ஆசிரிய தின விழாச் சிறக்க நிதி உதவிகள், மருத்துவக்கலாநிதி விஜயரத்தினம் மூலம் 'நம்பிக்கை நிதியம்' ஆரம்பித்தமை, கல்லூரிப் பௌதிகச் சூழலை விருத்தி செய்ய 9½ பரப்பு காணியை கொள்வனவு செய்து வழங்கியமை போன்ற அரிய பெரிய செயல்களை ஆற்றி வருகின்ற கனடா பழைய மாணவர் சங்கத்தை போற்றுவதோடு மேலும் மேலும் இதன் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**மு. சு. வேலாயுதபிள்ளை**

# கல்லூரியின் முன்னைநாள் அதிபர்
# திரு. கா. குமாரவேலு அவர்களின் வாழ்த்துரை



காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை ஆரம்பித்து ஐந்தாண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வெளிவருகின்ற இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒருமனிதன் தன் வாழ்நாளில் மூன்று அன்னையர்களை நேசிக்கவும் பூஜிக்கவும் போசிக்கவும் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பாலூட்டி வளர்த்த பெற்றதாய்,அறிவூட்டி வளர்த்த கல்லூரித் தாய், உரமூட்டி வளர்த்த பிறந்தகத்தாய் ஆகிய மூவருமே அந்த அன்னையர்கள்.

மேற்கூறிய கூற்றிற்கு அமைவாகப் புலம்பெயர் நாடுகளில் வாழும் காரை மாதாவின் மைந்தர்கள் தங்கள் நாடுகளில் காரை மாதாவின் பெயரில் சங்கங்கள் அமைத்து காரைநகரிற்கு பற்பல சேவைகள் செய்து வருவதை யாவரும் அறிவர். அந்தவகையில் தான் கனடா - காரை கலாசார மன்றமும் உருவாகி காரை மாதாவிற்கும் காரை மாதாவின் சேவையின் ஊடாக காரை இந்து மாதாவிற்கும் அளப்பரிய சேவையினை ஆற்றியுள்ளனர். அதையிட்டு கனடா - காரை கலாசார மன்றத்திற்கு கல்லூரிச் சமூகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எம் கல்லூரியை நேசிக்கின்ற எம் கல்லூரி மைந்தர்கள் காரை இந்து மாதாவிற்கு விசேட சேவைகள்,போஷணைகள் தேவையெனக் கருதி உருவாக்கியதே காரை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையாகும்.


இச் சங்கம்தான் வெளிநாட்டில் இயங்கும் ஒரேயொரு கிளையாக அமைகின்றது. எனவே இச் சங்கத்தை ஆரம்பித்தவர்கள் முன்னோடிகள். அவர்களை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இவ் வாழ்த்துச் செய்தியூடாக இரு வேண்டுகோள்களை இச்சங்கத்தினருக்கு விடுக்க விரும்புகின்றேன். இக் கல்லூரியின் தரவிருத்தியின் ஓர் அம்சமாக இரவுக் கற்கைநிலையம் (Night Study Center) ஒன்றை அமைத்தல் கல்லூரியைச் செழுமைப்படுத்த உதவுமெனக் கருதுகிறேன். எங்கள் கல்வி முறைமையானது குருகுலக் கல்வியிலிருந்து ஆரம்பமானது எனக் கூறுகின்றார்கள். குருகுலக் கல்வியிலிருந்து மருவிய நிலைதான் விடுதிக் கற்கை முறைமை(Hostel). விடுதி முறையிலிருந்து மருவிய (குறுகிய) நிலைதான் இரவுக் கற்கை நிலையம்.

ஒரு கல்லூரிக்கு எல்லாவகையான வளங்கள் இருந்தும் போதிய மாணவ வளம் இல்லையெனில் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. எங்கள் கல்லூரியிலும் மாணவர் வளம் குன்றியநிலை காணப்படுகின்றது. இதனை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. இதனைக் கருத்தியல் ரீதியாக புலம் பெயர் நாடுகளில் உள்ள எம் உறவுகள் தான் அனேகமான எம் ஊர் மாணவர்களின் வெளியேற்றலுக்கு உந்து சக்தியாக உள்ளார்கள் என அறியமுடிகின்றது.

காரை இந்து மாதாவின் புகழ் ஓங்கக் கனடா பழையமாணவர் சங்கம் உறுதுணையாக நின்று மென்மேலும் பற்பல சேவைகள் செய்து வளம் பெற வாழ்த்துகின்றேன்.

"வளர்க் நின் பணி, தொடர்கநின் பணி"

**கா. குமாரவேலு**


With Best Compliments From
VSCO CASH & CARRY
BIENVENUE
Nandhi
VSCO@VSCO.FR
Tilda
TRS
Himalaya HERBALS
PALANQUIN
ESPIG
197 RUE DU FAUBOURG SAINT-DENIS 75010 PARIS, FRANCE


Sell your home for top dollars
Buy Your Home For Less $$$
•FREE home market evaluation
•Free home staging
•Professional photo & virtual tour
•Just listed & sold flyer distribution
•Social media marketing
•Install sale & directions sings
•Email / e-flyers & weekly advertising
•Weekly open house
#1
RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
independently owned and operated
Bus: 905-475-4750
Fax: 905-475-4770
50 Acadia Ave #120,
Markham, ON L3R 0B3
Honest,
Knowledgeable
& Professional Service
in Your Neighborhoods Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
Dir: 416-333-6115
nanohomes@gmail.com

யா/காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
கனடாக் கிளையின் 5வது ஆண்டு விழா பொலிவு பெறவும்
அதன் பணிகள் உன்னதம் பெறவும் வாழ்த்துகின்றோம்.



**Sittampalam Thirugnanasampanthan**

***Consultant Geoscientist***
***Cypress, Texas,***
***U.S.A***

**Mrs. Nirmaladevi Thirugnanasampanthan**


காரை. இந்து அன்னையை
வளம்பெறச் செய்யும்
பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்
பணிகள் மேன்மேலும் தொடர
வாழ்த்துகின்றேன்.
கிருபானந்தம் யசோதரன்
பெரிய பிரித்தானியா.
(பழைய மாணவன் 1988-1994)

# For all your real estate needs...



## கனவு வசப்படும்



**Ravi. R.** Raveendran BSc.(Eng)
Real Estate Broker
**416-817-8479**

**HomeLife/GTA Realty Inc.**
Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

HOMELIFE HIGHER STANDARDS
MLS MULTIPLE LISTING SERVICE

With Best Compliments
From
**Kanapathippillai Sivapathasundaram**
In Memory of His Grand Parents
**Late Mr.Kanapathippillai Kandappu**
**Late Mrs.Kandappu Valliammai**



எங்கள் அம்மப்பா சிவபூசைச்செல்வர் திரு. கணபதிப்பிள்ளை கந்தப்பு
அவர்களும் அம்மம்மா கந்தப்பு வள்ளியம்மை அவர்களும்
(கே. கே. சுப்பிரமணியம் அவர்களின் அருமைத் தாய் தந்தையர்)

## பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்ற குழந்தைகள் மருத்துவ நிபுணர், மருத்துவக்கலாநிதி வி.விஜயரத்தினம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளை தனது ஐந்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளில் காரைநகர் இந்துக் கல்லூரியின் கல்வி தொடர்பாகவும் மற்றும் சுற்றாடல் தொடர்பாகவும் தனது பங்கினைக் கணிசமான முறையில் வழங்கி வந்துள்ளது.

இச் சங்கத்தின் நிர்வாக சபை எவ்வித உட்பூசல்கள் மற்றும் வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையாகச் செயலாற்றி வருவது மிகவும் பாராட்டுக்குரிய அம்சமாகும். இச்சங்கம் எந்த நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கங்களிலிருந்து விலகாமல் தனது பணியை ஆற்றிவருவது எல்லோரும் அறிந்ததேயாகும். கனடா-காரை கலாசார மன்றத்துடன் இணைந்து செயற்படுவது இச்சங்க நிர்வாகக் குழுவின் அனுசரணையான செயற்பாட்டிற்கு உதாரணமாகும்.

இச்சங்கம் எதிர்காலத்திலும் இவ்வாறு திறமையாகச் செயற்பட்டு கல்லூரியின் முன்னேற்றத்தில் தனது பங்கினை தொடர்ந்து வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**வி. விஜயரத்தினம்**

# பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்ற தொழிலதிபர் திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை



காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை 5வது ஆண்டு நிறைவினை கொண்டாடி மகிழும் இவ்வேளையில் அதனை வாழ்த்துவதற்குக் கிடைத்த வாய்ப்பிற்கு பேருவகையடைகின்றேன்.

130ஆண்டுகள் என்கின்ற நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டு பெருவிருட்சமாக உயர்ந்து நிற்கும் காரை.இந்துவின் கல்விப் பணி மகத்தானது. இக்கல்லூரியில் பயின்று உருவாகிய பல்துறை சார்ந்த சாதனையாளர்கள் ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் கல்லூரியின் பெயரை மட்டுமல்லாது காரை மண்ணின் பெயரையும் விளங்க வைத்துக்கொண்டுள்ளனர். காரைநகரின் முதன்மை அடையாளங்களுள் ஒன்றான இக்கல்லூரியின் மேம்பாட்டில் மிகுந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றி வருகின்ற பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கி வருகின்ற உதவிகளினால் அதன் கல்வித்தரத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டுவருவது உணரக்கூடியதாகவுள்ளது. இதுகுறித்து கனடா வாழ் பழைய மாணவர்கள் பெருமையடையமுடியும். இச்சங்கம் தனது உறுப்பினர் களுடனும் தாய்ச் சங்கத்துடனும் சிறந்த முறையில் தொடர்புகளைப் பேணி வருவதும் இதனுடைய நிர்வாகரீதியான செயற்பாடுகளும் விதந்து பாராட்டப்படக்கூடியன என்பதுடன் முன்னுதாரணமாக அமையக் கூடியனவாகும்.

'இசை அருவி' என்கின்ற சிறந்த இசை நிகழ்வுடன் வெகு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள 5வது ஆண்டு நிறைவு விழா வெற்றி விழாவாக அமையவும் பழைய மாணவர் சங்கம் வாழ்க, வளர்க எனவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மகாதேவன் பாலசுப்பிரமணியம்

'TO THINE OWN SELF BE TRUE"

யா/காரைநகர் இந்துக் கல்லூரி
J/KARAINAGAR HINDU COLLEGE
பழைய மாணவர் சங்கம்
OLD STUDENTS ASSOCIATION

Tel: 0212211722 E-mail: karaihindu@gmail.com

## *தாய்ச் சங்கத்தின் செயலாளர் வழங்கிய*

# வாழ்த்து



பழமையும் பாரம்பரியமும் பெருமையும் மிக்க முதன்மைப் பாடசாலையான காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்ற நிலையில் கனடா வாழ் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து தனித்துவமாக அமைப்புரீதியாக செயலாற்ற எண்ணி பரிணமித்த "காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாக் கிளை" அமைப்பாக ஐந்தாண்டுகள் செயலாற்றி நிறைவு விழா கொண்டாடவிருப்பதை எண்ணி பெருமையடைகின்றோம்.

கல்லூரி வளர்ச்சிப் பணிகளிற்கு உதவக்கூடிய ஆரோக்கியமான அமைப்பாக திகழ்ந்து வருவதுடன் கல்லூரியின் ஒவ்வொரு வளர்ச்சித் திட்டங்களிலும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றி எம்மையும் ஊக்குவிக்கின்ற அமைப்பாக விளங்கிவருகின்றது. பாடசாலையின் கல்வி வளர்ச்சித் திட்டங்கள், மாணவர் ஊக்கிவிப்புச் செயற்பாடுகள், நடைமுறைத் தேவைகள் என்பனவற்றுக்கு காத்திரமான பங்களிப்பை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" செயற்திட்டத்தின் மூலம் பாடசாலை விரிவாக்கம் பெறத் தேவையான காணிக் கொள்வனவு தொடர்செயற்பாட்டிற்கு பங்களிப்பை வழங்கியதுடன் தொடர்ந்தும் அக்கறைகாட்டி வருகின்றமை மகிழ்வை தருகின்றது. கல்லூரி மேலும் சீரும் திருவும் பொலிந்து வளரத் தன்னலமற்ற அருந்தொண்டாற்றி வருகின்றவர்களையும் நல்லாதரவுகளை வழங்குகின்றவர்களையும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு.அகிலன்**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
காரைநகர்.

'TO THINE OWN SELF BE TRUE"

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# J/KARAINAGAR HINDU COLLEGE
## பழைய மாணவர் சங்கம்
## OLD STUDENTS ASSOCIATION

## தாய்ச் சங்கத்தின் பொருளாளர் வழங்கிய
# வாழ்துச் செய்தி



இலங்கையின் வடபுலத்தே சைவத்தையும் தமிழையும் பாரம்பரிய கலாச்சாரத்தையும் ஒழுக்க விழுமியங்களையும் பேணி வளர்த்துவரும் காரைநகரில் வலந்தலையில் முத்து சயம்பு அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு இற்றைக்கு நூற்றுமுப்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து எமக்கு எந்நேரமும் பக்கபலமாகவும் உறுதுணையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக 2012ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கனடா பழைய மாணவர் சங்கத்தினர் மிகவும் சிறப்பாகவும், நேர்மையாகவும், வினைத்திறனாகவும், நாம் கேட்கும் உதவிகளையும் மனம் கோணாமல் சாதகமாக பரிசீலித்து எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும், ஏனைய பௌதீக வள வளர்ச்சிக்கும் எப்பொழுதும் உறுதுணையாக விளங்குகின்றனர்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும் விழா மிகவும் சிறப்பாக நிகழ வாழ்த்துவதுடன் கனடா பழைய மாணவர் சங்கம் மென்மேலும் சிறப்பாக செயற்பட வாழ்த்துகின்றேன்.

பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியிலும் காரைநகர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைய வேண்டும் எனும் உயரிய சிந்தனையுடன் இரவு பகல் பாராது செயலாற்றி வரும் கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. த. அம்பிகைபாகன், செயலாளர் திரு. கனக சிவகுமாரன், பொருளாளர் திரு.மா. கனகசபாபதி மற்றும் போசகர், நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானின் இறையருள் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திரு.கணபதிப்பிள்ளை நிமலதாசன்**

பொருளாளர்

பழைய மாணவர் சங்கம், காரைநகர்

Karai Welfare Society(UK)
காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

நிர்வாகம் 22nd April 2018
காரை இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா

## 5வது ஆண்டு நிறைவு விழா

அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல்
ஆலயம் பதினாயிரம் கட்டல்
அன்ன யாவினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

என்ற பாரதியின் பாடலுக்கேற்ப, கனடா காரை இந்தக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தாம் பயின்ற கல்லூரிக்கு பாரினில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் அதன் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் பாடுபடுவோமென புலம்பெயர் வாழ் காரை மக்களுக்கு பறைசாற்றி வருகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளில் தங்கள் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் பலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி வருவதையும், அங்குள்ள கல்லூரி பழைய மாணவர் சங்க தாய்க்கிளையுடனும், கல்லூரி நிர்வாகத்துடனும் நெருங்கிய தொடர்பில் இருந்து வருவதையும் நாம் கண்கூடாக பார்க்கின்றோம்.

இன்று 128 வருடங்களாக எங்கள் காரை இந்து எனும் கல்விக் கோவில் பல மாமனிதர்களை பல்வேறுபட்ட துறைகளிலும் உருவாக்கி அந்த மண்ணுக்கு மட்டுமன்றி இந்த மாநிலத்திற்கே தந்துள்ளது என்றால் அது மிகையாகாது. அப்படியான ஒரு கல்விக் கோவிலுக்கு தாங்கள் புலம்பெயர் தேசத்தில் பழைய மாணவர் சங்க கிளை அமைத்து அக் கோவிலின் கல்வி ஒளிவீச்சுக்கு களம் அமைத்திருப்பது காலத்தால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

மேன்மேலும் தங்கள் பணி சிறக்க, 5ம் ஆண்டு நிறைவு விழா வெற்றிபெற வாழ்த்துகின்றோம். தொடர்க தங்கள் பணி!! வளர்க்க எங்கள் கல்லூரியின் கல்விப் பணி!!!

நன்றி.

நிர்வாகம்
பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கம்.

President: Mr S .Konesalingam 07944232014 Secretary: Dr Oshini Shivakumar Treasurer: Mr B Kajendran 07951993073

# சுவிஸ் காரை அபிவிருத்தி சபை

## Swiss Karai Development Board

(ஆரம்பம் 04.12.2004) (பதிப்புரிமை நிர்வாகத்திற்குரியது) (Founded on 04.12.2004)

Email Address:- swisskarai2004@gmail.com

Addresse:- Hintermarchlenstrasse 62A, 8426 Lufingen, Switzerland.



**திட்டமிடல் ஒருங்கிணைப்பு உறுப்பினர்கள்:-**

சிவஸ்ரீ.த.சரஹணபவானந்தகுருக்கள்
திரு .சு.கதிர்காமநாதன்
Sivasri T.Saraganapavananthakurukkal
Mr. S.Kathirgamanathan

**ஏழுபேர்கொண்ட செயற்குழு உறுப்பினர்கள்:-**

தலைவர்:-
திரு.அ.லிங்கேஸ்வரன்
President
Mr. A.Lingeswaran
Tel:- 0041(0)-43 305 26 77

செயலாளர்:-
திரு.மு.பாலசுந்தரம்
Secretary:-
Mr.S.Balasundaram
Tel:-0041(0)-44 865 53 18

பொருளாளர்:-
திரு.ஸ்ரீ.பிறேமராஜா
Treasurer:-
Mr.S.Premarajah
Tel:-0041(0)-79 785 55 68

திரு.பூ.விவேகானந்தா
திரு.சு.விமலநாதன்
திரு.ச.லோகதாஸன்
திரு.அ.பரமசிவம்

Mr.P. Vivekanantha
Mr.S. Vimalanthan
Mr.S. Logathasan
Mr.A. Paramasivam

**தயார்நிலை உறுப்பினர்கள்:-**

திரு.க.சிவபாலன்
திரு.த.லோகேஸ்வரன்
திரு.ச.சர்வானந்தன்

Mr. K.Sivapalan
Mr. T.Logeswaran
Mr. S.Sarvananthan


உ
சிவமயம்

**''பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே''**

## வாழ்த்துச் செய்தி

"நாமறிவோம் உலகத்தில் நம் பண்பாடு - தமிழர்
நாம் தமிழர்: நம் திறத்துக்கு எவர் ஈடு"

-என்ற பாவேந்தர் கருத்தை தமதாகக் கொண்டு கனடாவில் வாழ்ந்து வரும் காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் ஐந்தாவது ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

கனடாவில் வாழ்ந்து வரும் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் எமது பண்பாட்டு விழுமியங்களின் பாதுகாவலராக நின்று தாம் செல்லும் இடமெல்லாம் முத்தமிழ் முழக்கம் செய்வது பாராட்டுவதற்குரியது. இன்றைய இளைஞர்களின் செயற்பாடுகள் அளவிடற்கரியன. எமது மூதாதையரின் புகழை உலகறிச் செய்யும் அவர்களின் முயற்சி மண்ணின் மணங்கமழ வழி வகுத்துள்ளது.

மலரை நாடும் தேனீக்கள் போல ஒவ்வொருவரையும் "இசை அருவி" யில் சங்கமிக்க வைக்கும் இம் முயற்சி மேன்மேலும் தொடர வேண்டும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத "இசை அருவி" என்று முழங்குவோம் "

எளிய மக்களோடு அவர் தம் நாளாந்த உணர்வுகளோடு எந்த மொழி உறவாடிக் கொண்டிருக்கிறதோ அந்த மொழி வாழும், வளரும்.

எனவே அத்தகு மொழியின் இனிமையைப் பாடிக் கொண்டே இருப்போம்.

" சுப்பர் சிங்கர் R.P ஷ்ரவண்" வழங்கும் "இசை அருவி" ஓர் அரிய நிகழ்வு.

உருக வைக்கும் திமிழிசை போன்ற நிகழ்வுகள் கண்டு களிப்பதற்கு மட்டுமல்ல, வேலைப் பளுவில் வாடும் நலிந்த உள்ளங்களுக்கு வலுவூட்டும் ஓர் இனிய நிகழ்வு.

" நமக்குரிய அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால்
நம்மீது சொற்றமிழ் பாடுக "

-என்றார் எம்பிரான், தம்பிரான் தோழருக்கு.

எனவே பாடுவோம் மனதிற்கு இன்பந்தரும் இனிய பாடல்களைக் கேட்டு சுவைத்து மகிழ்வோம்.

"இசை அருவி" புதிய பரிமாணம். ஒப்பற்ற ஓர் அரிய முயற்சி.

ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் இந்நிகழ்வை ஒழுங்கமைத்தவர்கள் போற்றுதலுக்கும் ஏத்துதலுக்கும் உரியவர்கள்.

கனதியான முயற்சி, காலமறிந்து, தேவையறிந்து, மக்கள் கருத்தறிந்து, வாழ்விற்க வளம் சேர்க்கும் முயற்சி.

" இளைஞர் போற்றுவோம், இனங் காப்போம் "
" இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் "

"தமிழைத் தமிழன் மறந்தது எப்போது?
வாழ்வதும் சாவதும் தமிழுக்கே என்றோது? "

-என்றார் பாவேந்தர்.

அவர் வழி நின்று.
"இசையால் இணைவோம், இளையோரைப் போற்றுவோம் "

ஐந்தாவது ஆண்டு விழா சிறப்புற, எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதார விந்தங்களைப் பணிந்து. எமது சபையின் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம

நன்றி
"ஆளுயர்வே ஊருயர்வு"
"நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்"

இங்ஙனம்
சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை
செயற்குழு உறுப்பினர்கள்
மொழி, கல்வி, கலை மேம்பாட்டுக் குழு
சுவிஸ் வாழ் காரை மக்கள்.
20 – 05 – 2018

## பழைய மாணவர் சங்கத்தின் போசகர்

# சிவநெறிச்செல்வர் திரு. தி. விசுவலிங்கம் அவர்கள்

## *வழங்கிய வாழ்த்து*



காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் (கனடா கிளை) ஆரம்பித்து ஐந்து ஆண்டுகாலம் (*01.09.2012 - 01.09.2017*) நிறைவு எய்தி ஆறாவது ஆண்டு தொடங்குகின்ற காலகட்டத்தில் அதன் பணிகளை எண்ணிப் பார்க்கும் பொழுது வியந்து போற்றுதற்குரிய அரும் பணிகளைச் செய்திருக்கிறது என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்குச் சாதனை படைத்ததை போற்றி இறைவனை வேண்டி வணங்கிப் பாராட்டி உளமார வாழ்த்துகிறேன்.

இச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கான காரணங்களைக் கலந்துரையாடி முறையாகவும் கட்டுக்கோப்பாகவும் வலுவாகவும் ஆரம்பிப்பதற்கு முன்னின்று பெரும் பணியாற்றிய பெருமக்களான திருவாளர்கள் சி. தம்பிராசா, கனக. சிவகுமாரன், மு. வேலாயுதபிள்ளை, ஆ. சோதிநாதன், க. அம்பலவாணர், திருமதி கிருஸ்ணவேணி சோதிநாதன் போன்றோர் சங்கத்தின் வரலாற்றில் நிலைபெற்று இருக்கவேண்டியவர்கள் ஆவர். இச்சங்கம் ஆரம்பமாவதற்கு அன்றைய கல்லூரி அதிபர் திரு. பொ. சிவானந்தராசா, தாய்ச் சங்கப் போசகர் திரு எஸ். கே. சதாசிவம் அவர்களின் பணிகளும் போற்றப்படவேண்டியனவாகும்.

இம்மன்றத்தை வளர்ப்பதற்கு அனுசரணையாக இருந்தவர்களுக்கும், நிதி உதவி அளித்தவர்களுக்கும், சிறப்பு நிகழ்ச்சிகளாக இசைக்கச்சேரிகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்குப் பேராதரவு அளித்தவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் கூறுவதோடு, தொடர்ந்து அவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் பெருகவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

காலத்திற்குக் காலம் இருந்துவந்த நிர்வாகக் குழுவினர் சிறப்பாகச் செயற்பட்டமையால் சங்கப் பணிகளை திறம்பட ஆற்ற முடிந்தது. இனிவரும் காலங்களிலும் அவர்கள் பணிகள் சிறப்புற்று விளங்க இறைவனை வேண்டுகிறேன்.

கல்லூரியில் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, கல்லூரியின் பௌதிகவளம் சார்ந்த பணிகளுக்கு அவ்வக் காலங்களில் இருந்த அதிபர்கள் சங்கத்திற்கு அளித்த பங்களிப்புகளுக்கும் கல்லூரியின் தேவைகள் குறித்து நிர்வாகக் குழு ஆக்கபூர்வமான முடிவுகளை எடுப்பதற்கு ஒத்துழைத்தமைக்கும் பாராட்டி நன்றி கூறுகிறேன்.

கல்லூரியின் பரிசளிப்பு விழா மாணவர்களின் உள்ளங்களில் பெரும் கனவுகளை உருவாக்கவும் ஊக்கத்துடன் கற்று உயரவும் வழி வகுக்கின்றது. அந்தவகையில் எம் கல்லூரி பரிசளிப்பு விழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்றுவர 'மருத்துவக் கலாநிதி வி. விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம்' பெரும் பங்காற்றிவருகிறது. அதை உருவாக்கிய மருத்துவக்கலாநிதி வி. விஜயரத்தினம் அவர்கள் கல்லூரி, சங்க வரலாற்றில் என்றும் போற்றப் படுபவராவார். இதுபோன்ற பணிகளை மற்றவர்களும் முன்வந்து பணியாற்றவேண்டுகிறேன்.

இச்சபையின் இணையத்தள நிர்வாகி திருமதி கிருஸ்ணவேணி சோதிநாதன் அவர்கள் கல்லூரி மற்றும் சங்க நிகழ்வுகளை உடனுக்குடன் இணையத் தளத்தில் பிரசுரித்து சங்கம் மற்றும் கல்லூரி சார்ந்த தகவல்களை, சாதனைகளை நல்ல ரசனை உணர்வுடன் பிரசுரித்து பரப்புரை செய்து பெரும் பணி ஆற்றிவருகின்றார். அவர்தம் பணிகளை பாராட்டுவதோடு தொடர்ந்தும் இப்பணிகளைச் சிறப்போடு செய்துவரவேண்டுகிறேன்.

திரு. ஆ. சோதிநாதன் அவர்கள் ஆரம்பத் திட்டமிடலில் உறுதியாக ஈடுபட்டமையால் அமைப்புக் குழுவில் நியமிக்கப்பட்டதுடன் சங்கத்தின் முதலாவது பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டு இரண்டு தவணைகள் சிறப்பாகப் பணியாற்றியபோது பாடசாலைக்கும் பயணம் செய்திருந்தார். தொடக்க காலத்திலிருந்து திரு சோதிநாதன் அவர்கள் ஆற்றிய பணிகள் மிகவும் போற்றப்பட வேண்டியவையாகும்.

தற்போது திரு. மா. கனகசபாபதி பொருளாளராக சங்கப் பணிகளில் பெரும்பங்கு ஆற்றி வருகிறார். திரு. ந. பிரகலாதீஸ்வரன் சிலகாலம் பொருளாளராக இருந்தார். இப்போது உபபொருளாளராகப் சிறப்பாகப் பணி ஆற்றி வருகிறார். அவர்களைப் பாராட்டுவதோடு, தொடர்ந்தும் இப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டுகிறேன்.

இச்சங்கத்தின் ஆணிவேராக இருந்து நாள்தோறும் சங்கம் பற்றிய சிந்தனையோடு வாழ்ந்துவருபவர் செயலாளர் திரு. கனக.சிவகுமாரன் அவர்கள். அவர் மனம் தளராது உறுதியோடு நின்று பணியாற்றுபவர். அவர் பணிகளை வியந்து பாராட்டுவதோடு தொடர்ந்தும் நற்பணிகளை ஆற்றிவருமாறு வேண்டுகிறேன்.

திரு.மு.வேலாயுதபிள்ளை அவர்கள் ஆரம்பத்திட்டமிடலில் ஈடுபட்டு அமைப்புக்குழுவில் நியமிக்கப்பட்டு சங்கத்தின் யாப்பினை வரைந்ததுடன் முதலாவது போசகராகவும் பின்னர் இரு தடவைகள் தலைவராகவும் பணி செய்ததுடன் இன்று வரை சங்கத்தின் பணிகளுக்கு ஆலோசனைகள் கூறி வழநடத்தி வருகின்றமையை நயந்து பாராட்டுகின்றேன்.

இச் சங்கம் இனிவரும் காலங்களிலும் சென்ற காலத்தைப்போல மேலும் சிறப்போடு செயற்பட்டு கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளில் தன்பங்கை தொடர்ந்து வழங்க, சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், அனுசரணையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென பணிவுடன் வேண்டி, இறைவன் திருவருளைப் பணிந்து வணங்கி, சங்கம் ஓங்கி உயர்ந்து வளரவும், சங்கப் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்கவும், உளமார வாழ்த்துகிறேன்.

என்றும் வேண்டும் இன்பஅன்பு.
அன்பே சிவம்.

**திரு. தி. விசுவலிங்கம்**


ANDY AUTO
QUALITY PRE-OWNED VEHICLES
1933, Kennedy Rd., Scarborough, ON. M1P 2L9
WE SELL ALL MAKES AND MODELS
ANDY AUTO
Bad Credit? Proposal? Bankruptcy?
NO PROBLEM!
BANKS SAY NO?
ANDY SAYS YES!
APPROVED
APPROVED
APPROVED
BMW
HONDA
ACURA
Mercedes-Benz
INFINITI.
Audi
TOYOTA
LEXUS
Call: 416 419 2300
Email: info@andyauto.ca
www. andyauto.ca

## துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்



## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா...!

60 ஆண்டுகள்
வர்த்தகத்துறையில் முன்னோடிகள்



27 வருடங்களாக துரித பணமாற்றுச்
சேவையில் கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில்
நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பைப்
பெற்ற ஒரே ஸ்தாபனம்

**3228 Eglinton Ave. East, Suite #3**
**(Eglinton & Markham)**
**Scarborough, ON. MIJ 2H6**

# Tel: 416-267-8221

*Best Complements from:*

# WALK IN DENTAL OFFICE

**New Patients Welcome**



## *Dr. Iru Vijayanathan*

BDS, FAGD, MFDS RCPS (Glasg)

**Dental Surgeon**

- DENTAL IMPLANT
- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (WHITE FILLING / SILVER FILLING)
- பல் பிடுங்குதல். ஞானப்பல் பிடுங்குதல்
- பல் கட்டுதல். நிரந்தர பல் கட்டுதல்
- பல்வேர் அடைத்தல் ROOT CANAL
- முரசு கரைதல். முரசிலிருந்து இரத்தம் வடிதல். வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்கான சிகிச்சை
- சிறுவர்கள் – முதியவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
*Markham & Eglinton*
**Tel: 416-264-3232**

3351 Markham Rd., Unit 129
*Markham & Steeles*
**Tel: 416-609-2022**


SriLankan
With Best Compliments From
sivatravel
TRAVEL AGENCY AWARDS
cheapairtickets.ch
Länggassstrasse 16, 3012 Bern.
Switzerland
Tel.0041 31 318 44 60
email. info@sivatravel.ch
www.sivatravel.ch www.cheapairtickets.ch

### காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர்

### திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை



காரைநகர் இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் தனது 5வது ஆண்டு நிறைவு விழாவை கோலாகலமாக ஏற்பாடு செய்து கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகிறேன். காரைநகர் இந்துக் கல்லூரி சுதேசிகளின் சிந்தனையால் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு அந்நியர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நிறுவுனர்களின் சிந்தனையின் அடிப்படையில் இன்று வரை பல கனவான்களின் உழைப்பினால் இலங்கையின் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. காலத்திற்கு காலம் பல்வேறு தடைகள், இடப்பெயர்வுகள் வந்த போதும் துவண்டுவிடாமல் இன்று வரை தலைநிமிர்ந்து செயற்படுகின்றது என்றால் அது இறை சித்தமேயாகும். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக மக்கள் புலம் பெயர்ந்த நிலையில், ஆங்காங்கு பல்வேறு பொது நோக்கம் கொண்டவர்கள் ஒன்று சேர்ந்து தமது தாயகப் பற்றை வெளிப்படுத்தத் தொடங்கினர்.

அந்த வரிசையில் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் முயற்சியினால் கனடா பழைய மாணவர் சங்கம் உருவானது. கடந்த ஐந்து வருடமாக அவர்கள் தமது உறுப்பினர்களை ஒன்று திரட்டுதல், கல்லூரியின் பழைய நினைவுகளை மீட்டல், கலை நிகழ்வுகளை நடத்துதல், கல்லூரிக்கு எந்தெந்த வகையில் உதவலாம் எனச் சிந்தித்து செயற்படுத்துதல், தாயகம் வரும்போது கல்லூரியைத் தரிசித்தல், கல்லூரிக்கென தனியான இணையத்தளத்தினைப் பேணுதல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது இவ்வாறான முயற்சிகள் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் வரப்பிரசாதமாகும்.

காரைநகர் இந்துக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் பல்வேறு முன்னுதாரணமான செயற்பாடுகளைப் பாராட்டுகிறேன். மேலும் பல ஆண்டுகள் உத்வேகத்துடன் சங்கம் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் அருளாட்சிபுரியும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகிறேன்.

காரைநகர்
10.05.2018

**ப.விக்னேஸ்வரன்**
தலைவர், காரைநகர் அபிவிருத்திச் சபை
(ஓய்வு நிலை பிரதிச் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு)

# பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் செயலாளர் திரு. தி. மார்க்கண்டு அவர்களின் வாழ்த்துரை



திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

அன்பும் பண்பும் ஒருங்கே அமையப் பெற்ற கனடா வாழ் காரைநகர் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க அன்பர்கள் நலமுடன் இனிதே வாழ என் இதயபூர்வமான வாழ்த்துக்களை முதற்கண் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன். அவர்களுடைய நற்சேவை மிகவும் போற்றுதற்குரியது. கல்லூரி மாணவர்கள் மேன்மையடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்கு அரும் பெரும் சேவை செய்யவேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோள்.

"கண்ணிரண்டேயாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு" என்ற முதுமொழி நினைக்கற்பாலது.

எங்கள் கல்லூரி மேன்மைக்கு தங்கள் சங்கம் ஆற்றுகின்ற அரும்பெரும் சேவை மகத்தானது. பல இலட்சம் ரூபா செலவில் பள்ளிக்கூட அபிவிருத்திப் பணிக்கு நண்பர்கள் காணி கொள்வனவு செய்து அளப்பரிய அன்புடன் வழங்கியது மிகவும் பாராட்டுக்குரியது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கூற்று. தங்கள் சங்க அன்பர்கள் அனைவரும் அக்கூற்றுக்கிணங்க வாழ்வாங்கு வாழ்கிறார்கள் என்பதற்கு மறுவார்த்தை கூறுவதற்கில்லை. கல்லூரியின் உயர்ச்சிக்காக அங்கே பயிலுகின்ற மாணவர்கள் நலம் பெற வேண்டும் என்ற நல் நோக்கத்திற்காக பணத்தை பெருவிருப்புடன் வாரிவழங்கி நற்சேவை புரிந்துள்ளார்கள். அவர்கள் நலம் பெற்று நீடூழி வாழ்க .

காரைநகரில் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆரோகணித்து அருள்பாலிக்கும் தில்லைக் கூத்தன் சிதம்பரநாதன் தங்கள் அனைவருக்கும் நல்லாசிகள் வழங்குவார் என்பதில் இம்மியளவேனும் ஐயப்பாடில்லை என்பது எனது உணர்ச்சி பூர்வமான கருத்து.

திருஞானசம்பந்தர் வித்தியாலயம் என்ற நற்பெயருடன் ஆரம்பமான எங்கள் கல்லூரி தழைத்தோங்கி சிறப்புற சேவையாற்ற இறைவன் திருவருள் புரிவாராக.

கல்லூரி மாணவர்களின் எழுச்சிக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

இன்பமே சூழ்க.

வாழ்த்து வழங்குபவர்
தி. மார்க்கண்டு

### சமூக சமய அரசியல் பணியாளரும் கல்லூரியின் மூத்த பழைய மாணவனுமாகிய

## திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்களின்

# வாழ்த்துரை



பிரசித்திபெற்ற காரைநகர் இந்துக் கல்லூரி கல்வியாலும் அபிவிருத்தியாலும் உயர்வடைய வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்துடன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கனடா காரைநகர் இந்து பழைய மாணவர் சங்கம் அதன் பயணத்தில் வெற்றி கண்டுள்ளதையிட்டு காரைநகர் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவன் என்ற வகையில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்று இச்சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்றவர்கள் எதிர்கொண்ட எதிர்ப்புக்களையும். தடைகளையும் கனடா வாழ் மக்கள் நன்கு அறிவர்.

இத்தடைகளையும் தாண்டி முன்னின்று உழைத்த அமரர் சி.தம்பிராசா (முன்னாள் காரை இந்து துணை அதிபரும்-பழைய மாணவனும்) திரு. வேலாயுதபிள்ளை, திரு. அம்பலவாணர், திரு. கனக. சிவகுமாரன், திரு. ஆறுமுகம் சோதிநாதன், திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் மற்றும் பலர் முன்வந்து ஆரம்பித்த காரை இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விருட்சம்போல் வளர்ந்து வருவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. சுயநலமற்ற நிர்வாகிகள் அர்பணிப்புடன் செயற்பட்டு வருவதனால் இச்சங்கத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டு என வாழ்த்துகின்றேன். ஏனைய பழைய மாணவர் சங்கங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு கிளைகளை நிறுவி செயற்படுகின்றனர்.

ஆனால் கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம் ஒரு முன்னோடியான வழியைக் கடைப் பிடிப்பது பாராட்டத்தக்கது. கனடா பழைய மாணவர் சங்கத்தை மையமாக வைத்து ஏனைய நாடுகளிலுள்ள பழைய மாணவர்களை இணை உறுப்பினர்களாக இணைத்து செயற்படுவது பாராட்டத்தக்கது. நாம் எங்கு வாழ்ந்தாலும் ஒன்றுபடுவோம் என்பதை இது உறுதிசெய்கின்றது. கல்லூரியின் வளர்ச்சியை இதயத்தில் கொண்டவர்கள் ஒன்றுபட்டு உழைப்பர்.

சங்கத்தின் வளர்ச்சிக்கு இணையத்தளம் முக்கியமான பிரச்சாரக் கருவியாக விளங்குகின்றது. பாடசாலை தொடர்பான எல்லா நிகழ்ச்சிகளையும், சாதனைகளையும் உடனுக்குடன் வெளியிடுவதால் பலநாடுகளிலும் வாழுகின்ற காரைமக்கள் அவற்றினை அறிந்து கொள்வதோடு பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவதற்கும் முன்வருகின்றனர். இந்த இணையத் தளத்தைத் திறமையாக நிருவகிப்பவர் பாராட்டுக்குரியவர்.

காரை இந்து பழைய மாணவர் சங்கம் - கனடா மேன்மேலும் வளர எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

அன்புடன்
**ஐ. தி. சம்பந்தன்**
காரை இந்துக் கல்லூரி பழைய மாணவன்



காரை இந்துவில் 25 ஆண்டுகள் ஒப்பற்ற அதிபராகச் சேவையாற்றி
கல்லூரி உன்னதமான நிலையினைப் பெற அயராது உழைத்த உத்தமர்
அமரர் கலாநிதி ஆ. தியாகராசா அவர்களை நினைவு கூருகின்றேன்.

கல்லூரின் பழைய மாணவன்

# வாழ்த்துக்கள்

**Are You Interested in Pre-Construction Condos?**




*Deal with Experienced PLATINUM/VIP Agent - I Represent You!*

**Are You Wondering about the Market Condition and Current Value of Your Home?**



FREE HOME EVALUATION
416.303.4005

## Why me?

- FLEXIBLE Listing Commission
- FREE Professional Photography
- FREE Home Staging*
- Full Color Printed Brochures
- Will Do Effective Open Houses Until Sold
- Your Home Advertised 24/7 to Millions on MLS System & On the Internet
- In Depth Analysis of Local Market, Schools and Amenities
- Friendly and Confidential Service
- Referrals to Reputable Mortgage, Legal and Home Inspection Services
- Special Discounts at "The Brick" on Furniture, Appliances & Electronics
- 100% Guaranteed Results

Buying? RESIDENTIAL | CONDO | PRE-CONSTRUCTION CONDOS
Selling? Leave it to the Experienced Professional Today and Start Packing Tomorrow

"The Activity You're Most Avoiding Contains Your Biggest Opportunity." -Robin Sharma



**Ratheesh Subramaniam,** B.Sc (Hons)
Sales representative
HomeLife GTA Realty Inc.,Brokerage
*Independently Owned & Operated
**416-303 4005**
ratheesh_maniam@hotmail.com

Platinum VIP Agent for Many Leading Condo Developers
Winner of multiple Homelife awards 2010 - 2017

# MILLENNIUM DRIVING SCHOOL

*M.T.O Approved Beginner Driver Education Course Provider*

- Special care for nervous drivers
- Discount certificate for car Insurace (With full course)
- Driving for all ages
- Early road test Arrangements



## A. A. KANDASAMY

*3098, DANFORTH AVENUE, SUITE #D, SCARBOROUGH, ON. M1L 1B1*

**TEL: 416 699 4747 CELL: 416 569 1421**

# ஜோன் டியூயின் *(John Dewey)* கல்விக் கொள்கை

கல்வி என்றால் என்ன? கல்வியின் இலக்கு யாதாயிருக்க வேண்டும்? கல்வி யாருக்கு அளிக்கப்பட வேண்டும்? யாரால் அளிக்கப்பட வேண்டும்? கல்வி எத்தகையதாக இருக்க வேண்டும்?கல்வி எத்தகைய சூழலில் அளிக்கப்பட வேண்டும்? கல்வி ஏன் அளிக்கப்பட வேண்டும்? கல்வியின் பயன் என்ன?

இத்தகைய கேள்விகளுக்கு விடை காண முற்பட்டு, தமது முயற்சியின் காரணமாக உலகத்தின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்த்த பெருமக்களையே நாம் கல்விச் சிந்தனையாளர்கள் என்கிறோம்.

பிளேட்டோ,ரூசோ,பிறிபல்,டியூயி,காந்தியடிகள் ஆகியோர் இந்த வரிசையைச் சேர்ந்தவர்கள்.

பிளேட்டோவின் கல்விக் கொள்கை இலட்சியவாதத்தின் பாற்பட்டது. இதனை அறிவு மையக் கல்விக்கொள்கை என்றும் சொல்லலாம். இக்கொள்கையில் சில உண்மைகள் நித்தியமானவை என்றும், முழுமை யானவை என்றும், அவற்றையடைவதே கல்வியின் இலக்காக இருக்க வேண்டும் என்றும் கொள்ளப்பட்டது.

பிளேட்டோவிற்குப் பின்னர் வந்த ரூசோவின் கல்விக்கொள்கை இயற்கை வாதத்தின் பாற்பட்டது. இதனை மாணவ மையக் கல்விக்கொள்கை என்றும் கூறலாம். இக்கொள்கையில் குழந்தை ஒன்று இயற்கையான சூழலில் அதனது இயற்கையான தன்மைக்கேற்ப, அல்லது விருப்புக்கள், தேவைகள் என்பனவற்றிற்கு இயைந்த நிலையில் அக்குழந்தைக்கு கல்வி புகட்டப்பட்டால் அக்குழந்தை ஒரு முழுமையான மனிதனாக வளர்ச்சியடையும் என்று கொள்ளப்பட்டது.

ஆனால், கல்வியை அறிவு மைய நிலையிலோ, அல்லது மாணவ மைய நிலையிலோ நிலைநிறுத்தாமல் சமுதாயத்தை மையமாகக் கொண்டு அமைக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டவர் அமெரிக்க நாட்டறிஞரான ஜோன் டியூயி அவர்கள்.

இவர் அமெரிக்காவிலுள்ள பேர்லிங்டன் என்னுமிடத்தில் 1859ம் ஆண்டில் பிறந்தவர். பல்கலைக்கழகப் படிப்புக்குப் பின்னர் மிக்சிக்கன், மின்னசோட்டா, சிக்காக்கோ, கொலம்பியா ஆகிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியவர். சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் 1894ம் ஆண்டில் கல்வித்துறைப் பேராசிரியராக இவர் பணியாற்றியபோது இங்கு இவரால் ஆரம்பித்து நடத்தப்பட்ட 'செய்முறைப் பாடசாலை' கல்வித் துறையில் ஒரு பெரும் புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுத்தது. கல்வி,ஜனநாயகம், தத்துவம் ஆகிய துறைகளில் இவர் உழைத்து எழுதிய நூல்கள் உலகப் பிரசித்தமானவை; பெரும் சிந்தனைப் புரட்சிக்கு வித்திட்டவை. இவர் இயற்கை எய்தியது 1952ம் ஆண்டிலாகும்.

பிளேட்டோ ஒரு இலட்சிய அரசினால் ஆளப்படும் ஒரு இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம், இலட்சிய மனிதர்களை உருவாக்க முடியுமென நம்பினார்.

ஆனால் ரூசோவோ ஒவ்வொரு தனி மனிதனையும் இலட்சிய மனிதனாக உருவாக்குவதன் மூலம் ஒரு இலட்சிய சமுதாயத்தைப் படைக்க முடியுமெனக் கனவு கண்டார்.

எந்தக் கல்விக் கொள்கையை எடுத்துக்கொண்டாலும் அக்கொள்கைகள் சில அடிப்படையான வேறுபாடுகளை ஆராய முற்படுவதையே நாம் பார்க்க முடியும். அறிவுக்கு முதலிடம் கொடுப்பதா அல்லது ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுப்பதா என்றோ அல்லது தனி மனிதனுக்கு முதலிடம் கொடுப்பதா அல்லது சமுதாயத்திற்கு முதலிடம் கொடுப்பதா என்றோ இப்பிரச்சினைகள் ஆராயப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

தனி மனிதன் ஒருவன் எச்சந்தர்ப்பத்திலும் நடைமுறையிலிருக்கும் சமுதாயம் ஒன்றிலேயே வளர்ந்து வாழவேண்டியுள்ளது. எனவே ஹேபர்ட் ஸ்பென்ஸர் என்ற கல்வியாளர் கூறியிருப்பது போல ஒரு மனிதன் முழுமையான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமேயானால் அவன் அச்சமுதாயத்திலிருக்கும் சகல துறைகளிலும் அனுபவம் உள்ளவனாகவும், ஆற்றல் மிகுந்தவனாகவும் இருக்கவேண்டியுள்ளது.

எனவே, கல்வியின் இலக்குக் குறித்தும், கல்வி முறையில் கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் குறித்தும், கல்வியின் உள்ளடக்கம் குறித்தும் சிந்திக்கும்போது சமுதாயத்தையும் தொடர்பு படுத்தியே சிந்திக்கவேண்டியிருக்கின்றது.

சமுதாயத்தைத் தொடர்புபடுத்திக் கல்வி பற்றிய கருத்துக்களை மிகவும் நுணுக்கமாக வெளியிட்டவர் ஜோன் டியூயி அவர்கள். இவருடைய கருத்தின்படி கல்விக்கு ஓர் ஆக்கபூர்வமான பணி உண்டு. திட்டமிடப்பட்ட முறையில் சமுதாயத்தை மாற்றி யமைக்கும் பணியையும் கல்வி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது இவரது கருத்தாகும். தனிமனித ஆற்றலையோ, சமுதாய ஆற்றலையோ வளர்ப்பது மட்டும் கல்வியின் இலக்கு அல்ல.

நடைமுறையிலிருக்கின்ற சமூக அமைப்பை மாணவர்கள் விமர்சிப்பதற்கும், அச்சமூக அமைப்பை அவர்கள் புனர் நிர்மாணம் செய்வதற்கும் வழிசெய்யும் முறையில் கல்வியின் இலக்கு அமைய வேண்டும் என்பது டியூயின் கருத்தாகும்

ஒரு பரந்த அடிப்படையில் நோக்கும்போது கல்வி என்பது ஒரு சமூகம் தான் வாழவும், தான் வளரவும் தனது இளைய தலைமுறையினருக்கு அளிக்கின்ற ஒரு கருவியாகக் கொள்ளப்படலாம்.

குழந்தைகளின் இயற்கையான தன்மை அவர்களைச் செயலாற்றத் தூண்டுகிறது. ஆனால் இச்செயலுக்கு இயற்கையானதான ஒரு குறிக்கப்பட்ட ஒழுங்கான வடிவம் கிடையாது.

சமூகம் குழந்தையின் செயற்துடிப்புக்கு ஒரு ஒழுங்கான வடிவம் கொடுக்க முயற்சி செய்கின்றது. இம்முயற்சியையே கல்வி என்கின்றோம்.

குழந்தையின் இயற்கையான செயலாற்றும் துடிப்புக்குச் சமூகம் ஒரு ஒழுங்கான வடிவத்தைக் கொடுக்க முயற்சி செய்யாவிட்டால் அத்துடிப்பு முரண்பட்ட திசைகளில் வளர்ச்சியடைந்து அச் சமூகத்தைக் கட்டிக்காத்துப் பேணுகின்ற சக்திகளையே நாசம் செய்யவும் முனைந்து விடும். எனவே, ஒரு சமூகம் தன்னை வாழவைப் பதற்கோ அல்லது வளர்த்துக் கொள்வதற்கோ மட்டு மன்றித் தன்னை அழிவிலிருந்தும் காத்துக்கொள்வதற்கே கல்வி மிக மிக இன்றியமையாததாகின்றது.

கல்வியைச் சமுதாயத்துடன் தொடர்புபடுத்திச் சிந்தித்துக் கல்வியின் உள்ளடக்கம் எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் டியூயி அவர்கள் மிகவும் ஆணித்தரமான முறையிற் தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார். இக்கருத்துக்கள் செயல்முறை வாதம் என்ற தத்துவத்தைச் சார்ந்து நிற்பவை.

கல்வி புகட்டப்பட வேண்டிய முறை 'ஒழுங்கின்' அடிப்படையில் அமைய வேண்டுமேயல்லாது அதிகாரத்தை நம்பியதாக இருக்கக் கூடாதென்பது டியூயின் கொள்கை.

அதிகாரம் வெளிச் சக்திகளின் விளைவு.

ஒழுங்கு, தனது வசதி, தனது தேவை கருதி ஒருவன் தனக்குத் தானே ஏற்படுத்திக்கொள்கின்ற நடைமுறை.

சில விளைவுகள் நன்மையானவையென்றும் அந்த நன்மைகளை அடைவதைக் குறிக்கோளாகவும் கொண்டு பிரயோகிக்கப்படுவதே அதிகாரமாகும்.

ஆனால் எந்த விளைவையும் முன் கூட்டியே நல்லதென்று கூற முடியாதென்பது டியூயின் கருத்தாகும்.

'நல்லது' என்பது ஒப்பீட்டு முறையிலே பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதைப் போலவே

'விருப்பம்' என்பது கட்டாயப்படுத்துவதன் மூலம் உண்டாக்கப்பட முடியாததொன்றாகும்.

எனவே, கல்வியில் 'ஒழுங்கு' என்பது ஒருபோதுமே வெளி அதிகாரத்தின் மூலம் உருவாக்கப்பட முடியாத ஒன்றாகும்.

மாணவர்கள் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் உந்தப்படும் போது தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்கிறான்.

தனது அறியாமையை உணர்ந்த உடனேயே மாணவன் ஒருவன் கற்க வேண்டமென்ற ஆர்வத்தினால் உந்தப் பட்டு தன்னைத் தானே ஒழுங்குபடுத்த முயல்கின்றான்.

மாணவன் தனது அறியாமையை உணர்வதற்கு 'பிரச்சனை' ஒன்று வேண்டும் 'பிரச்சனையைத்' தீர்க்க முற்படும்போது கல்வி தொடங்குகிறது.

எனவே, கல்வியின் முதற்படி 'பிரச்சனை' ஒன்று உள்ளதென்பதை உணர்தலேயாகும்.

'பிரச்சனை' ஒன்று உள்ளதென்பதை உணர்ந்திருப்பதனால் மட்டுமே அப்பிரச்சனைக்கத் தீர்வு காணும் முயற்சியில் மாணவன் ஒருவன் நிச்சயமாக ஈடுபடுவான் என்று சொல்லமுடியாது.

பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அவன் ஈடுபடும்போது, அவனைச் சார்ந்திருக்கும் குழுவிலிருந்து அவனை விலகச் செய்யும் வண்ணம் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சி இருக்குமேயானால் அவன் அச்செயலில் இயங்குவதற்குத் தயங்கவே செய்வான். அவனைச் சார்ந்தோரும் அப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சியிலீடுபடும் போது தான் அவன் அச்செயலில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான்.

எனவே, கல்வியின் இரண்டாவது படி மாணவன் அவனைச் சூழவுள்ள குழுவினரோடு சேர்ந்து அவர்களது நோக்கங்கள் வேறுபடா வண்ணம் செயலாற்றும் முயற்சியிலீடுபடுவதாகும்.

ஒழுங்கின் அடிப்படையில் அமைந்த கல்வி பெறும் முயற்சிக்குத் தேவையான அடிப்படைகளாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்.

1) எந்த வகையான கட்டாயப்படுத்தும் செயல்களும் தவிர்க்கப்பட வேண்டும் - கட்டாயம் இருக்குமேயானால் அக்கட்டாயத்திலிருந்து தப்புவது எப்படியென்று மாணவன் சிந்திப்பானே தவிர கற்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் தூண்டப்பட மாட்டான். அடித்தல், ஏசுதல், கோபித்தல், பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறவேண்டுமென ஆசைப்பட வைத்தல் என்பன போன்றவை எல்லாமே ஒரு வகையான கட்டாயத்தின் பாற்பட்டவையென்றுதான் சொல்லவேண்டும்.

2) மாணவன் ஒருவன் 'பிரச்சனை' ஒன்று உள்ளதென்பதை உணரும்படியாக ஆசிரியர் செலாற்ற வேண்டும்.- பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்ற உணர்வுதான் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தை மாணவனிடம் தூண்டுகிறது.

3) மாணவனிடம் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டுவதற்கு ஒவ்வொரு தனி மாணவனதும் அவனது தனிப்பட்ட விருப்புக்கள், வெறுப்புக்கள், ஆசைகள், தேவைகள் என்பவற்றை உணர்ந்தவராக ஆசிரியர் இருக்க வேண்டும். எல்லா மாணவர்களும் ஒரே வகையான விருப்பு வெறுப்புக்களையும், ஆசைகளையும், தேவைகளையும், உள்ளவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறாகும். ஒவ்வொரு மாணவனையும் கற்கவேண்டுமென்ற ஆர்வமுடையவனாக ஆக்குவதற்கு ஒவ்வொரு மாணவனைப் பற்றியுமே ஆசிரியர் நன்கு அறிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

4) வகுப்பில் உள்ளோர் அத்தனை பேரும், ஆசிரியர் உட்பட, கற்கும் முயற்சியில் ஒருவரோடு ஒருவர் கூட்டுறவு முறையில் இணைந்து செயல்படும் ஓர் சூழலை உருவாக்க வேண்டியது ஆசிரியரது கடமையாகும். கூட்டுறவின் அடிப்படையில் செயல்படும் இக்குழுவில் ஆசிரியர் அதிக அனுபவம் உள்ளவராக செயல்படுகின்றாரே தவிர அதிக அதிகாரமுடையவராக செயல்படக்கூடாது.

இத்தகைய அடிப்படையில் கற்றல் நிகழுகின்ற போது மாணவன் தனது செயல் மூலமே கல்வி பெறுகின்றான்.

செயல் மூலம் கல்வி என்பது டியூயி அவர்களது கல்விக் கொள்கையின் அடிப்படையான அம்சமாகும்.

அனுபவத்தின் மூலம் பெறப்படும் வளர்ச்சிதான் கல்வி என்பது டியூயியின் கருத்தாகும்.

அனுபவம் கல்வியின் அடிப்படை என்று சொல்கின்ற அதே நேரத்தில் எல்லா அனுபவங்களும் கல்வி ஆகாது என்பதை ஒப்புக்கொள்ள அவர் தயங்கவில்லை.

கல்விமுறை பற்றி டியூயி கூறியுள்ள கருத்துக்களைப் போலவே கல்வியின் உள்ளடக்கம் பற்றியும் டியூயியின் கருத்துக்கள் மிகவும் புரட்சிகரமானவை. ஒரு சமூகம் தான் வாழவும் வளரவும் தனது இளைய தலைமுறையினரை ஒழுங்குபடுத்தும் முயற்சிதான் கல்வி என்னும் வரைவிலக்கணத்திற்கு அமையவே

கல்வியின் உள்ளடக்கம் பற்றிய டியூயியின் கருத்துக்களும் உள்ளன.

ஒரு சமூகத்திலுள்ள தொழில்களும் கலைகளும் சமூக வளர்ச்சிக்குத் தேவையான அறிவியல், சமூகவியல், கலையியல்,பொருளியல் பாடங்களும் கல்வியின் உள்ளடக்கமாக இருக்க வேண்டுமென டியூயி விரும்பினார். ஆனால் இத்தனை விசயங்களும் கல்வியின் உள்ளடக்கமாக அமைந்தபோதிலும் ஒவ்வொரு தனி மாணவனது விருப்புக்கள், வெறுப்புக்கள், தேவைகள் என்பனவே கல்வியின் அடிப்டையாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்த அவர் தயங்கவில்லை.

இந்திய விடுதலைக்குப் பெரிதும் உழைத்த காந்தியடிகள், கல்வி பற்றியும் மிகவும் ஆழமாகச் சிந்தித்துத் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

காந்தியடிகளின் கல்விக் கொள்கைக்கும் டியூயி அவர்களின் கல்விக் கொள்கைக்கும் இடையில் பெருத்த ஒற்றுமை உண்டு. இருவரது கல்விக் கொள்கைகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது டியூயி அவர்களின் கல்விக் கொள்கைகளே காந்தி அடிகளின் கல்விக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன என்று கூடச் சொல்லலாம் போலத் தோன்றுகின்றது.

இன்று இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் புதிய கல்வித் திட்டம் பெருமளவுக்கு டியூயி அவர்களினதும் காந்தி அடிகளினதும் கல்விக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே உள்ளது.

சு. குமாரசாமி
முன்னாள் ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி

**நன்றி:** *கல்விக் கொள்கைகள், பாடசாலைப் பரிபாலனம் சம்பந்தமான விரிவுரைகளின் தொகுப்பு நூல் - 1973*
*வெளியீடு: அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்*



AIRPORT LIMO SERVICE
Airport Limo Driver
airportlimo101@gmail.com
CHANDRASOTHY THIRU
416-312-3061
Limo Service 24/7 To and
From Toronto Pearson Airport

# JetSpeed Travels



EMIRATES - KUWAIT AIRWAYS - LUFTHANSA - ETIHAD - KLM - CATHY PACIFIC - ALITALIA - QATAR AIRWAYS - JET AIRWAYS - AIR SAHARA - GULF AIR - SINGAPORE AIR LINES - BRITISH AIRWAYS - AIR CANADA - SRI LANKAN AIR LINS

IATA

26 வருட கனேடிய அனுபவம் உள்ளவர்களால் உங்களுக்குத் தேவையான பிரயாண ஒழுங்குகளை மிக இலுகுவாக செய்து கொள்ள அழையுங்கள்

ATAC

TICO

***We Specialize in ....***

- Air Travel
- Package Tours
- Cruise
- Rail
- Car Rental and Travel Insurance

www.jetspeedtravels.com
info@jetspeedtravels.com

***All your travel arrangements will be done by our travel experts with 26 years experience***

**Tel: 416-609-0544**

**Fax: 416-332-0082**

**After Hours: 416-803-0720**

**24 HOURS AVAILABLITY OF BOOKING ONLINE AT www.jstaironline.com**

**5800 Sheppard Ave. East, Suite #12**
**Scarborough, ON.**

# பாடசாலை அதிபரும் சுற்றாடற் தொடர்பும்

ஒரு பாடசாலை அதிபருக்கு நிர்வாகப் பொறுப்புடன் கற்பித்தல் பொறுப்பும் சமூகத் தொடர்பும் என பலவகைக் கடமைகள் உள்ளன. நிர்வாகம் என்னும் போது பாடசாலையை செவ்வனே நடத்துதல், நிர்வகித்தல், கல்வித் திணைக்களத்துடனான தொடர்புகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். கற்பித்தல் பொறுப்பு எனும்போது ஒரு பாடசாலை மாணவர் தொகையைப் பொறுத்து அதிபரின் கற்பித்தல் நேரம் கணிக்கப்பட்டு அதன்படி கற்பித்தல் கடமையில் செயல்பட வேண்டும். சமூகத் தொடர்பு அல்லது சுற்றாடல் தொடர்பு என்று கூறும்போது

(அ) பெற்றோர்கள்
(ஆ) பாடசாலை சுற்றாடல் நலன் விரும்பிகள்
(இ) அரசியல் தலைவர்கள்
(ஈ) கல்வித் திணைக்களம் ஏனைய திணைக்களம், சமய நிறுவனங்கள் என்பவற்றுடன் கொண்டுள்ள தொடர்புகளைக் குறிக்கும்.

பாடசாலைகள் ஒரு குறிப்பிட்ட சுற்றாடலுக்கு மட்டும் சொந்தமானவை என்னும் எண்ணக்கரு தற்காலத்தில் மறைந்து வருகின்றன. 'திறந்த பாடசாலைகள்' என்னும் கருத்தே இப்போது பரவி வருகின்றது. பாடசாலைகளில் நோக்கங்கள் பரந்த அடிப்படையில் இருப்பதுடன் சமுதாயத்தின் மாற்றங்களுக்கும், தேவைகட்கும் ஏற்ப வளைந்து கொடுக்கக்கூடியதாக அமையவேண்டும். பாடசாலைக்கு எங்கிருந்தெல்லாம் மாணவர்கள் வருகிறார்களோ அங்கெல்லாம் பாடசாலையின் தாக்கம் ஏற்படவேண்டும். அந்த அளவிற்குப் பாடசாலைகள் பரந்த நோக்கமும், சமூகத்திற்குப் பயன்படும் தன்மையும் உடையனவாகத் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டும்.

கல்வியானது வாழ்க்கை முழுதும் தொடர்கிறது. பாடசாலைகள் தம் சுற்றாடலில் வாழும் மக்களுடைய அனுபவங்களை பயனுள்ளவையாக ஆக்க எவ்வளவோ செய்யலாம். அவ்வாறு செய்வதற்கு பாடசாலைக்கும் அதன் சுற்றாடலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருக்க வேண்டும். பாடசாலை மூல வளங்கள் சூழ உள்ள சமூகத்துக்கு பயன்படவேண்டும்.

முன்னர் பாடசாலைகளை அதிபர்கள் நிர்வகித்தனர். ஆனால் இன்று ஒரு அதிபர் நிர்வாகியாகவும், முகாமையாளராகவும் செயற்படுகின்றார். சமூகத்தில் இடம்பெற்றுவரும் வேகமான மாற்றங் கட்கு பாடசாலைகள் ஈடுகொடுக்க வேண்டுமெனின் அவை சமுதாயத்தில் இருந்து விலகி இருக்க முடியாது. சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்க பாடசாலையும், பாடசாலைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய சமூகமும் ஒன்றுக்கொன்று உதவத் தயாராக இருக்கவேண்டும். இவ்வாறு சுற்றாடல் தொடர்பு சம்பந்தமாக அதிபர்கள் பங்கு மிக மிக அவசியம். எனவே அதிபர் சுற்றாடல் சமூகத்தை நன்கு அறிந்திருப்பதுடன் சுற்றாடல் தொடர்பில் தனக்குரிய இடத்தையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்து ஏற்படும் தாக்கங்களை சமாளித்து பாடசாலை யிலும், சமூகத்திலும் தன் தலைமைத்துவத்தை அதிபர் நிலைநாட்ட வேண்டும். திட்டமிடற் கருமங்களைச் செய்யும்போது பாடசாலையினதும் சமூகத்தினதும் தேவைகளும் மூலவளங்களும் சரியாக இனங்கண்டு செயற்படவேண்டும்.

சமூகத்திலுள்ள மூலவளங்களுள் மிக முக்கியமான மூலவளம் பெற்றோர் ஆகும். தம்பிள்ளைகளின் கல்வித் தேவைகளை பாடசாலை தீர்த்து வைக்க முயலும்போது பெற்றோரும் தம்மாலான உதவிகளைச் செய்ய முயல்வர். எனவே அவர்கள் கண்ணியமாக கவனிக்கப்படவேண்டும். பெற்றோரைப் போல் பின்வரும் மூலவளங்களும் சமூகத்தில் காணப்படுகின்றன.

(அ) பாடசாலை அபிவிருத்திச்சபை
(ஆ) பழைய மாணவர் மன்றம்
(இ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்
(ஈ) அரசாங்க தனியார் நிறுவனங்கள் என்பன

அதிபர் பாடசாலைத் தலைவராக மட்டுமன்றி சூழ உள்ள சமூகத்தின் தலைவராகவும் விளங்க வேண்டும். அப்படியாயின் சமூக்தின் மூல வளங் களையும் முறையாக பயன்படுத்தலாம்

### 1. பாடசாலைத் தேவைகள்:

**(அ)** பௌதீக தேவைகள்:
பாடசாலைக்கு தேவையான பல்வேறு கட்டிடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன.

**(ஆ)** பணியாட்கள் தேவை:
சிற்றூழியர், எழுதுவினைஞர்.

**(இ)** துணைப்பாடவிதான தேவைகள்:
உபகரணங்கள்

**(ஈ)** சேமநல சேவைத் தேவைகள்:
ஆசிரியர் அறை, பொழுதுபோக்கு முயற்சிகள்

**(உ)** நிதித் தேவை:
பல்வேறு தேவைகட்கான பணம்

### 2. சமூகத் தேவைகள்

(அ) சமூக சீர்திருத்த வேலைகள்
(ஆ) வளர்ந்தோர் கல்வி
(இ) சேமநல சேவைகள்
(ஈ) கலை, கலாச்சார நிகழ்ச்சிகள்
(உ) பொழுதுபோக்கு வசதிகள்

கல்வியும் சமூக அபிவிருத்தியும் ஒன்றோடொன்று இணைந்து செயற்படவேண்டும். இவ்விருதரப்பு முன்னேற்றத்தையும் அடைவதற்கு சில முக்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

### நிர்வாகத் தொடர்புகள்:

1. கல்வி அமைச்சு, பிராந்திய கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோருடனான தொடர்புகள். இவை பாடசாலை நிர்வாகம் சம்பந்தமானதாக இருத்தல் வேண்டும்.

2. பாடசாலை அலுவலர்களிடையே உள்ள தொடர்புகள். (உ + ம்) ஆசிரியர்கள்,சிற்றூழியர்கள் போன்றோருடனான தொடர்புகள்

### அரசியல் தொடர்புகள்:

கல்வி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவில் அடங்கும் ஒரு கருமம். அதனால், அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அங்கத்தவர்கள் ஏனைய அரசியற் பிரமுகர்கள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கவேண்டியது அவசியமாகிறது. இத்தொடர்புகள் இருவழித் தொடர்புகளாக இருத்தல் வேண்டும்.

இதன்மூலம் பாடசாலைத் தேவைகள் பண ஒதுக்கீடுகள் என்பவற்றையும், ஆசிரியர் பற்றாக் குறை என்பவற்றையும் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

### தொழில் அடிப்டையிலான தொடர்புகள்:

இத்தொடர்பு முக்கியமாக பாடசாலையில் பயிலும் பிள்ளைகளைப்பற்றி அவர் தம் பெற்றோருடனானது, வகுப்பு ஆசிரியர்களும் பாட ஆசிரியர்களும் பெற்றோருடன் தொடர்புகொள்ளல் பயனுள்ளதாக இருக்கும். இத்தகைய தொடர்புகள் பிள்ளைகளின் வீட்டுப் பின்னணியை ஆசிரியர்கள் நன்கு அறிந்துகொள்வதற்கு பெரிதும் உதவும்.

### சமுதாயத் தொடர்புகள்:

இரு பரந்துபட்ட அடிப்படையில் மேற்கொள்ளப் படவேண்டும். பாடசாலைகளில் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் அண்மியுள்ள சமூகத்தவர்கள் பங்குகொள்ளக்கூடியதாகவும் சமூக வைபவங்களில் பாடசாலை பங்குகொள்ளக்கூடியதாகவும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அவற்றோடு சிரமதான வேலைகள், சமய, சமுதாய, கலை, கலாச்சார நிகழ்ச்சிகள், விழாக்கள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு செயற்பாடுகள் என்பவற்றையும் ஒழுங்குசெய்யலாம். இதற்கு இளைஞர்கள், முக்கியஸ்தர்கள் போன்றோரது ஆதரவினை பெற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

இத்தகைய தொடர்புகள் மூலம் சமூகத்தில் ஒரு சிறந்த கல்விச் சூழ்நிலையை ஏற்படுத்தலாம். பாடசாலையை விட்டு விலகியவர்கள், வளர்ந்தோர் என்று பல தரப்பினருக்கும் வெவ்வேறு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தலாம். இவற்றுக்கு மைய இடங்களாக தகவல் பரிவர்த்தனை நிலையங்களாக பாடசாலைகளைக் கொள்ளவேண்டும்.

பாடசாலையும் சுற்றாடலும் தொடர்பாக மேலே செயற்றிட்டம் அமுலாக்கப்படும்பொழுது அதில் பலரும் கலந்துகொள்வர். எனவே தொடர்புகள் தனித்தனியாக துண்டிக்கப்படாத நிலையில் தொடர்புபடல் வேண்டும். பாடசாலை - சமூக தொடர்புகளைப் பேணுவதில் அதிபர்களின் தலைமைத்துவ பண்புகள் மிக முக்கியமானவை. அதிபரும் ஆசிரியர்களும் சமூகத்தோடு நெருங்கி செயற்படவேண்டும். சமூகத்தின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக பாடசாலைகள் தோற்றமளிப்பது அவசியமாகும். எனவே நேரமறிந்து சாதுரியமாக மேற்கொள்ளப்படும் நேர்மையான தொடர்புகள் மூலம் அதிகமான பயனை அடையலாம்.

எனவே அதிபரின் முகாமைத்துவ திறன் எவ்வளவு சிறப்பாகதாக இருக்கிறதோ அதே வகையில் பாடசாலையும் சமூகமும் வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை

தா. பரசுராமபிள்ளை
வாழைச்சேனை, கொத்தணி அதிபர்

**நன்றி:** *சர்வதேச ஆசிரிய தின விழா சிறப்பு மலர் 'ஆசிரிய தீபம்' - 1991*
*வெளியீடு: வாழைச்சேனை கல்விக்கோட்ட ஆசிரிய ஒன்றியம்.*

---

# காரைநகர் இந்துக்கல்லூரியின் உத்தேசிக்கப்பட்ட பாதசாரிகள் கடவை (மேம்பாலம்)

காரைநகர் மேற்கு வீதியின் வடக்கேபோகும் சயம்புவீதியும் தெற்கேபோகும் மொந்திபுலம்வீதியும் தொடங்கும் சந்தியில் அமைவிடத்தைப்பெற்ற இந்துக்கல்லூரியின் கல்விசார் இரு கட்டடத்தொகுதிகளும் வீதியின் இருபக்கங்களிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் காலம் காலமாக மாணவர்களும்,ஆசிரியர்களும் தங்கள் கல்விசார் தேவைகளுக்காக வீதியை குறுக்கே கடந்தே பயணிக்கவேண்டியுள்ளது.

இதனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள வாகனப் போக்குவரத்து அதிகரிப்பும் மற்றும் எதிர்காலத்தில் இவை பன்மடங்காகவும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இதனால் விபத்துக்கள் நடக்கவும் வாய்ப்புக்கள் உள்ளது. இதற்கு தீர்வு செய்யும் முகமாக இரண்டு பிரதான கட்டட தொகுதிகளுக்கும் இடையில் வீதிக்கு குறுக்கே ஒரு மேம்பாலம் (பாதசாரிகள் கடவை) அமைத்தால் பாதசாரிகள் எல்லோருடைய பாதுகாப்பை, உறுதிப்படுத்தலாம் என்கின்ற எண்ணக் கருவோடும் மனித உயிரின் மாண்பினை மதித்தும் இந்த உத்தேச வரைபடத்தை வரைந்துள்ளேன்.

நன்றியுடன்,
செல்வரத்தினம் செல்வநாயகம்

இலகடி, வலந்தலை
காரைநகர். (கனடா)
2018.04.14



HOMELIFE
HIGHER STANDARDS
Home Life/Future Realty Inc.,
Brokerage*
*Independently own and operated
For all your
Real Estate Needs...
Vilvan Sivasothy
Sales Representative
Your Best Interests Are
Always My Top Priority
416 - 908 - 2398
vilvan.sivasothy@gmail.com
Bus: 905-201-9977
Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham
ON L3S 4N8

*With Best Compliments*

*From*

AKT

**Subramaniam Tharmaratnam**



பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்
5வது ஆண்டு விழா சிறப்புற்று விளங்கவும்
காரை. இந்துவுக்கான சங்கத்தின் பணிகள் தொடரவும்
வாழ்த்துகின்றோம்



# திரு. திருமதி சுப்பிரமணியம் அரிகரன்

S.P.சுப்பிரமணியம் நினைவுத் திட்டத்தின்
அனுசரணையாளர்

காரை.இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்
5வது ஆண்டு நிறைவு விழா சிறப்புற்று விளங்கவும்
அதன் பணிகள் தொடரவும்
வாழ்த்துபவர்:

# கந்தமூர்த்தி ஆனந்தசற்குணநாதன்(ஆனந்)

**Bruchsal**
**West Germany**

பழைய மாணவன்(1976-1982)
கல்லூரியின் மாணவத் தலைவன்
மைதான நிகழ்வுகளின் தேசியமட்டப் போட்டியாளர்
தேசிய மட்ட உதை பந்தாட்ட அணிக்குத் தெரிவானவர்
யாழ் மாவட்ட உதை பந்தாட்ட அணியின் முன்னணி வீரர்

காரை. இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்
5வது ஆண்டு நிறைவு விழா உன்னதம் பெற்று
விளங்கவும் அதன் பணிகள் தொடரவும் வாழ்த்துபவர்கள்:



# திரு. நல்லையா பூங்குன்றன்

***Production Manager***
***Melbourne, Australia.***

பழைய மாணவன் (1974-1981)
கல்லூரியின் மாணவத் தலைவன்
சயம்பு இல்லத்தின் செயலாளர்
உயர்தர மாணவர் மன்றத்தின் செயலாளர்

# திருமதி சங்கமித்திரா பூங்குன்றன்

பழைய மாணவி (1978-1985)
முன்னைநாள் இசை ஆசிரியை
கல்லூரியின் மாணவத் தலைவி
சயம்பு இல்லத்தின் விளையாட்டுத்துறைத் தலைவி

# உண்மையான கல்வியின் நோக்கம்

**திரு. ந. சபாரத்தினம்,** B.A
அதிபர் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்

எங்கள் கல்விச்சாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தாம் வாழும் உலகத்தின் இயல்பு களை, முன்னேற்றச் சக்திகளை, அவற்றினால் மனிதவாழ்வு அடையும் பெறுபேறுகளை, எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வு, மறைவு என்ன என்பதை உணர்ந்து கொள்வதற்கு வேண்டிய ஆரம்ப அறிவைத்தானும் பெற்றுள்ளார்கள் என்று கூற முடியாதிருக்கின்றது. இந்த நிலையிலே கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நாம் நமது சாதனைகளைப் பற்றி பெருமைப்பட்டுக் கொள்வதற்கு எத்தகைய காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பரீட்சை என்ற அளவுகோலுக்கு அடங்கிய பல துறைகளிலேயே அவர்களுடைய கல்வி அமைந்து கிடக்கிறது. உயிரற்ற வெற்று உண்மைகளைச் சேகரிப்பதைத் தவிர 'உள்ள விடுதலைக்கான' மார்க்கங்களில் நமது கல்வி அமையவில்லை. "உண்மையான கல்வியின் நோக்கம் உள்ளத்தின் விடுதலையே" என்று கல்விமான்கள் கூறிய அந்த உயர்ந்த நிலையை நமது பட்டதாரிகள் எய்தலோ, எய்த எத்தனிக்கவோ முடியவில்லை. வாசாலகமான பிரச்சாரங்களுக்கும், குறுகிய சாதி, சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் நாம் தலை வணங்கு வதில்லையா? நமது சாதாரண வாழ்விலே கல்லாதவர்கள், அரைகுறைக் கல்வி உள்ளவர் களிலும் பார்க்க படித்தவர்கள் என்றிருப்பவர்கள் கூடுதலான சகிப்புத்தன்மையையாவது காட்டு கிறார்களா?

வாழ்க்கைக்குத் தேவையானதும், அநுபவ ரீதியுமானதான கல்வியை விடுத்து வெறும் பள்ளிப் படிப்பினால் என்ன பயன் என்று கல்வி நிபுணர்கள் குறை கூறிவரும் இந்தக்காலத்திலே, அன்று கிரேக்க நாட்டுப் பேறறிஞர்களான பிளேட்டோவும (Plato) அரிஸ்ரோட்டலும் (Aristotle) முதன் முறையாகக் கூறிய **"உள்ள விடுதலைக்கான கல்வி"** என்ற வரைவிலக்கணம் பொருத்தமற்றதாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் கூறிய சிறந்த இலட்சியத்தை நாம் நன்குணர வேண்டும். இன்று 'உபயோகமான' கல்வியை மாணவன் நன்றாகக் கற்று வாழ்க்கை வசதிகளை நன்கு அமைத்துக் கொள்ளட்டும். ஆனால், அதோடுகூடப் பாடசாலை களிலும், உயர்தரக் கல்வி நிலையங்களிலும், அவன் 'உபயோகம்' குறைந்தனவாகக் கருதும் அந்தத் துறைகளிலும் பயிற்சிபெற்றுப் பண்புள்ளவனாகவும், திறமையுள்ளவனாகவும் , சிறந்த பிரசையாகவும் விளங்கட்டும்..

இலக்கியம், தத்துவம்,சரித்திரம் என்பனவே மனித இனத்தின் பண்புகளையும் வாழும் வகைகளையும் போதிக்கின்றன. ஆனால், பௌதீகம், இரசாயனம், உயிரியல் போன்றவை விஞ்ஞான முறையான விதிமுறைகளை மாத்திரமே போதிக்கின்றன. ஆதலால் **உள்ள விடுதலையை** தரக்கூடிய கல்வியைப் பெறுவதற்கு அந்த 'உபயோகம்' குறைந்த பாடங்களே ஏற்றவையாக இருக்கின்றன. ஆனால், இச்சமூகக்கலைகளைக் கலைக்காகவும், அவற்றின் சிறப்புக்காகவும் பயிலாமல் பரீட்சைகளையும் பட்டத்தையுமே குறியாகக் கொண்டு பயில்வதனால் அவையும் உள்ள விடுதலைக்கேற்ற கல்வியாக அமையமாட்டா.

தத்துவம்,சமயம் என்பவற்றிற் காணப்படும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அல்லது சரித்திர வாயிலாகப் பெறப்படும் முடிவுகள் என்பன சுட்டிக்காட்டும் உண்மைகளை உலகினைப் பற்றியும் மனித வாழ்வினைப் பற்றியும் அநுபவமடையாத இளம் மாணவன் முற்றாக விளங்கிக் கொள்ள முடியாதென்பது உண்மையே. ஔவையும், திருவள்ளுவரும், உலகுக்களித்த அமரத்துவம் வாய்ந்த நூல்களிற் கூறப்படும் உலக ஞானமும் ஒழுக்கக் கோட்பாடுகளும் வாழ்க்கையில் அநுபவ முதிர்ச்சி அடையும்போதுதான் நன்கு விளங்கும். பழம்பெரும் வரலாற்று நூலாசிரியர்கள் காட்டும் கருத்துக்களை இளம் உள்ளங்கள் விளங்குவது கடினமே தான். ஆனால்,காலத்தோடு ஒட்டிய சம்பவங்களால் அக்கருத்துக்கள் தெளிவடையும் போது அவை விளக்கமடையும். "காலங்கடந்து பயன் தரும் செயல்" என்ற விதி மனித வாழ்வின்

பல துறைகளிலும் இருப்பது போலவே கல்விக்கும் உள்ளது. வகுப்பறைகளில் தூவிய விதை மனிதனாக வளர்ந்து வாழுங்காலத்தில் பழுத்துப் பயன் தருமன்றோ? மாணவப் பருவத்திலே சாத்திரம், தத்துவம், இலக்கியம் என்ற பாடங்கள் சீர்தூக்கியறியும் அறிவைப் பலம் பெறச் செய்கின்றன. அவற்றிற் காணப்படும் உயர்ந்த இலட்சியங்களும், சிறந்த பண்புகளும் அந்தப் பிஞ்சு உள்ளங்களிலே பதிந்துவிடுகின்றன.

சமயசார்பற்ற பௌதீகக் கல்வி பற்றியெல்வாம் இப்போது பேசி வருகின்றோம். அதற்கு ஆதாரமாகப் பல பெரியார்களின் கூற்றுக்களை எடுத்துக்காட்டாகவும் கொள்கின்றோம். அந்த பௌதீகக் கல்வி மாணவனுடைய சமூகத்தின் மத கலாசார பாரம்பரியத்தை ஒதுக்கிவைத்துள்ளதா? தன்னைச் சுற்றியுள்ள மத கலாச்சார சூழலிலிருந்து மாணவன் ஆத்மீகச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையற்றவனா? சேவை உணர்ச்சியை, உயர்ந்த இலட்சியத்தை அவ்ஆத்மீக உணர்ச்சி மாணவ னுடைய உள்ளத்திலே வளரச் செய்யாதா? சமயம், கலாச்சாரம், சமூகநீதி என்ற தற்காலக்கொள்கை என்பன யாவுமே இந்த உயர்ந்த குறிக் கோளைத்தான் வலியுறுத்துகின்றன. இத்தகைய பண்புகளை, ஆத்மீக செல்வத்தை மாணவனுடைய உள்ளத்தில் - அவன் சைவனானால் திருமுறை களிலிருந்தும், கிறிஸ்தவனானால் பைபிளிலிருந்தும், பௌத்தனானால் தர்ம பதத்திலிருந்தும், முகமதியனானால் கோரானிலிருந்தும் பதியச் செய்வதே **கல்வியின் நோக்கமாகும்.** பாடசாலைக் கல்வியென்பதை அவன் அங்கே சம்பாதித்துக்கொள்ளும் அறிவன்று. பாடசாலை யையோ, சர்வ கலாசாலையையோ மாணவன் விட்டு விலகும்போது மேலும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டுமென்று அவனுடைய உள்ளத்தில் எழும் **ஆர்வமே** உண்மையான கல்வியாகும். பாடசாலையில் ஆரம்பித்த கல்வி, வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்கிறது, அதற்கு **முடிவில்லை**, "படித்த அனைத்தையும் மறந்தபின் எஞ்சிநிற்பது எதுவோ அதுவே கல்வி" என்று ஒரு பழமொழியும் உண்டு. அங்ஙனம் எஞ்சிநிற்பது எது? "எப்பொருளைக் கேட்டாலும் , அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண்பதுவே அது".

இயற்கையன்னை இந்த நாட்டிலே நமக்கு எல்லா வகையான செல்வங்களையும் தந்திருக்கிறாள்ள லௌகீகம்,கலை,மனித வாழ்வு, இவை யனைத்துக்கும் ஏற்ற வளங்கள் பலவற்றை அள்ளிச் சொரிந்திருக்கிறாள். ஆனாலும், எங்களிற் பெருந்தொகையானவர்கள் தேசியச் செழிப்பிலும் வறுமையினால் வாடுகிறோம்ள அறிவு மிகுந்த ஒரு யுகத்திலே அறியாமையால் வாடுகிறோம்ள வைத்தியசாஸ்திர அறிவு முன்னேறியுள்ள ஒரு காலத்திலே நோய்களால் நலிவடைகிறோம். எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த மாறுபட்ட நிலையை கல்விமான்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றார்கள்?

இரண்டு கருத்துக்கள் நமது கவனத்துக்கு வருகின்றன. உண்மையான மாணவனுக்குரிய மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுதல் - அதாவது அறிவைத் தேடுவதில் தணியாத ஆர்வமும் குன்றாத ஊக்கமும் கொள்ளுதல் ஒன்று. நம்மோடு கூடவாழும் மக்களின் சாதி-சமய-நிற-வகுப்பு வேறுபாடுகளைப் பாராது உண்மையான மனிதாபிமானத்தை வளர்த்துக்கொள்ளுதல் மற்றது. அறிவும் மெய்ஞ்ஞானமும் இணைய வேண்டும்ள விவேகமும் அன்பும் ஒன்றுகூட வேண்டும், அங்ஙனம் கலந்து பரிணமிக்கும்போது தான் குறுகிய மனப்பான்மைக்கு ஏதுவான ஆசாபாசங் களைக் கடந்து நிற்கும் மனத்திண்மையும் ஆக்கபூர்வமான சக்தியும் நமக்குக் கிடைக்கும். சமூகத்தின் பாரம்பரியமான கட்டுப்பாடுகள் மாறுபட்டாலும் உண்மையின் வழியிலே நீதியின் முன்னணியிலே நம்மை இட்டுச்செல்ல உதவுவதும் அந்த மன உறுதியேயாகும்.

**குறிப்பு: இக் கட்டுரையாளர் காரைநகர் இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது**

**நன்றி:** காரைநகர் சைவ மகா சபை
பொன் விழா மலர்

**காரை. இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்
மகத்தான பணிகள் சிறப்புற்று விளங்கவும்
5வது ஆண்டு நிறைவு விழா வெற்றி பெறவும் வாழ்த்துபவர்:**

# கனகரட்ணம் ஈஸ்வரபாதம்

பழைய மாணவன் (1980 1985)
காந்தி இல்லத்தின் விளையாட்டுத்துறை உப தலைவர்
வகுப்புத் தலைவன்

***Sidney***
***Australia***

**காரை. இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின்**
**5வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெறவும்**
**அதன் பணிகள் தொடரவும் வாழ்த்துபவர்கள்:**

"....அன்றொருநாள்பல வாண்டுகளின் முன்னர்
அன்புறு நெஞ்சின னாயச **யம்புவின்**
சிந்தனையில் தவ யோகப் பொருளுருவில்
வந்தனை நம்தமை வாழ்விக்க மகிழ் வொடு ...."



# திரு. ஆறுமுகம் செந்தில்நாதன்

பழைய மாணவன்

# திருமதி கலாசோதி செந்தில்நாதன் (கீதா)

பழைய மாணவி

**Leewinkel - 17,**
**8154 - Oberglatt,**
**Switzerland**

(சடையாளி, ஆலடி
காரைநகர்)

காரை. இந்துவை செழிப்புற வைக்கும் பணியில்
அக்கறையுடன் செயலாற்றி வரும் பழைய மாணவர் சங்க
கனடாக் கிளையின் 5வது ஆண்டு விழா
உன்னதம் பெற்று விளங்க வாழ்த்துபவர்:



# தர்மலிங்கம் விக்கினேஸ்வரனும் குடும்பத்தினரும்

# Tharmalingam Vickneswaran

**(Old Student 1984-1985)**
**Bachelor of Applied Science**
**Civil Engineering Honors**
**Resident Engineer (CCM-Certified Construction Manager)**
**Logan International Airport**
**Boston, USA.**


# யாழ். / காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா ஆற்றிவரும் கல்விசார் மகத்தான பணிகள்

பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி

யாழ் - காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயில் அமைந்துள்ள புண்ணிய பூமி ஆகும். இவ்வூரில் பேராசிரியர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர் (F R.A.S), திரு. ச. அருணாசல உபாத்தியாயர், கலாநிதி ஆறுமுகம் தியாகராசா (M.P.), தத்துவக் கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள் முதலான பல சான்றோர்கள் தோன்றினர் என்பதும் இவ் வூருக்குச் சிறப்பாகும். இங்கு பிறந்து, வளர்ந்து கல்வி பயின்ற காரைநகர் மக்கள் பலர் புலம் பெயர்ந்து, கனடா, இங்கிலாந்து, பிரான்சு, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா முதலான பல நாடுகளில் வாழ்கிறார்கள். அந்நாடுகளில் வாழும் காரைநகர் மக்கள் தம் பாடசாலைகளின் நினைவாகவும். தாயகப் பற்றுடனும், சங்கங்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர். இச் சங்கங்கள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் தம் தாயகப் பாடசாலைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவனவாகவும், தாயகத்தை வளம் படுத்துவனவாகவும, அமைகின்றன.

மனிதனின் மிக உன்னதமான செயற்பாடு கற்றலாகும். கற்றலுக்குக் களம் அமைப்பன பாடசாலைகளாகும். தாயகத்தில் பாடசாலைகள், கல்லூரிகள் இயங்குவதற்கு அரசாங்கம் நிதியுதவி அளிப்பதாயினும், அவ்வுதவி போதுமானதாக இல்லை. அதனால் வசதியான வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள், போதிய ஆசிரியர்கள் இன்மை, என்பன நிலவிவருதல் மாணவரின் கல்வி நிலையைப் பாதிப்பனவாகும்.

இப்பின்னணியில் கனடாவில் 2012 செப்ரெம்பர் முதலாந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்' தனது ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை இன்று நடத்துகின்றனர். இவ்வேளையில் அவர்கள் வெளியிடும் சிறப்பிதழில் இச்சங்கத்தினரின் இந்துக் கல்லூரி நோக்கிய பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன பற்றி அறிந்துகொள்ளுதல் பயனுடையதாகும். இந்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது தமது கல்லூரி நிர்வாகத்துடனும்.



கல்லூரித் தாயகச் சங்கத்துடனும் இணைந்து செயற்படும் முறைமையும் விதந்து கூறப்பட வேண்டியதாகும்.

பொதுவாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் தாம் அமைத்துள்ள பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள் ஆகியன ஆண்டு தோறும் ஒன்று கூடல் நிகழ்ச்சியை நடத்துவது வழக்கமாகும். இப்பொது ஒன்று கூடலின்போது, ஊர் மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி அறிமுகமாவதும், தம்மிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதும் முக்கிய நோக்கங் களாக அமைகின்றன. இந்த ஒன்றுகூடல்களின் மூலமே ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து தத்தம் பாடசாலைகள் தொடர்பான பணிகளை மேற் கொள்வதற்குரிய அடித்தளங்கள் அமைக்கப் படுகின்றன என்பதால், இத்தகு ஒன்று கூடல்களும் அவசியமாகின்றன.

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் தம் பாடசாலை நோக்கி மேற் கொண்டுவரும் பணிகள் மகத்தானவை. மாணவரது வகுப்பறைச் சூழல், பாடசாலைச் சுற்றுச் சூழல் என்பன அழகாகவும் அமைதியாகவும் அமையும் போதே மாணவரும் நல்லதொரு சூழலில் கல்வியை மேற்கொள்ள வாய்ப்பாகிறது. அவ்வகையில் இப்பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் மின்இணைப்புக்கான மாதாந்தக் கட்டணம்,

பாடசாலையின் இணையத்தளக் கட்டணம் முதலியவற்றைச் செலுத்தி கல்லூரியின் இயல்பான செயற்பாட்டிற்குத்துணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மாணவரும் ஆசிரியர்களும் அமைதியாக அமர்ந்திருந்து உணவருந்தத்தக்க சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைத்துள்ளனர். இதனை எமது பாடசாலைச் சங்கத்தின் ஊடாக அமரர் திருவேங்கடம் நினைவாக அவர்களின் பிள்ளைகள் அமைத்துக் கொடுத்துள்ளமையும் கருத்திற்கொள்ளத்தக்கது.

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்விஅமைச்சு நியமனம் செய்யும் ஆசிரியர்களின் பற்றாக்குறை அனைத்துப் பாடசாலைகளிலும் இருக்கவே செய்கின்றது. இதனால் மாணவர் கல்வியே பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மாணவரது தேர்வுகளுக்குத் தேவையான கற்பித்தலை நிறைவு செய்யும் வகையில் தற்காலிக ஆசிரியர்களும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர்களும் பாடசாலை பழைய மாணவரின் நிதியுதவியுடன் நியமிக்கப்படுவது வழக்கமாகும். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் சம்பளத்திற்கான நிதி உதவி அளித்தமை மாணவரின் கல்விக்குச் செய்த உதவியாகின்றது. இது ஆளணிப் பற்றாக்குறையினைப் போக்கும் தற்காலிக உதவித்திட்டத்தினகீழ் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரிகள் 100ஆவது, 125ஆவது நிறைவு ஆண்டு விழாக்களைக் கொண்டாடுவதும். அவ்வேளைகளில் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரி வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் **சிறப்பு மலர்களை** வெளியிடுவதும் பொதுவான வழக்கமாகும். அவ்வகையில் இந்துக் கல்லூரி 125ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியபோது வெளியிடப்பட்ட விழாச்சிறப்பு மலருக்குரிய முழுச்செலவினையும் இச்சங்கத்தின் உறுப்பினராகிய மருத்துவர் விஜயரத்தினம் அவர்களிடமிருந்து பெற்றுக் கல்லூரிக்கு வழங்கியதோடு, அச்சிறப்பு மலர் கல்லூரியின் ஒரு வரலாற்று ஆவணமாக வெளியிடப்பட்டதும் குறிப்பிடப்பட வேண்டியனவாகும். அத்துடன் தம் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவைக் கனடா கந்தசாமிகோயில் மண்டபத்தில் மிகச்சிறப்பாக ஒழுங்கமைத்துக் கொண்டாடியுமுள்ளனர். அவ் விழாவில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளால் கல்லூரியின் நலன்விரும்பிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 7,76,000/= நிதியைக் கல்லூரியின் தாயகச் சங்கத்திற்கு அனுப்பிப் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டமை பாராட்டத் தக்க செயற்பாடாகும். இதுபோன்றே இக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கலாநிதி தியாகராசா நூற்றாண்டு விழாவிற்கான அனுசரணையையும் இச்சங்கம் வழங்கியுள்ளது.

இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலாகத் தமது ஆசிரியர்களைக் கௌரவிக்குமுகமாக அங்கு நடைபெறும் **'ஆசிரியர் தின விழா'க்**களுக்கு நிதியுதவி வழங்கிவருதலும் நன்றி சார்ந்த பாராட்டுச் செயற்பாடாகும். மேலும் இப்பாடசாலைச் சங்கத்தினர், மருத்துவர் கலாநிதி வி. விஜயரத்தினம் அவர்களின் பெயரில் பாடசாலையில் ஒரு **நம்பிக்கை நிதியத்தை** உருவாக்கி, அதனை மாணவரின் கல்வித் தேவைகளுக்குப் பயன்படுத்தி, கல்வியை மேம்படுத்தும் பணியல் ஈடுபட்டுவருதலும் மகத்தான பணியாகும்.

பாடசாலையில் நடைபெறும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பல **நினைவுப் பரிசில்களை** ஏற்படுத்தி, அதன் மூலம் கல்வியில் சாதனை புரிந்தோருக்குப் பரிசில்கள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் அமரர் சின்னத்தம்பி தம்பிராசா, அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி, அமரர் கனகசுந்தரம், அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை ஆகியோரின் நினைவாக ஆண்டுதோறும் நினைவுப் பரிசில் தொகையும் வழங்கப்பட்டுவருகின்றது. அத்துடன் எஸ் பி. சுப்பிரமணியம் நினைவு உதவித்திட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்றுச் செல்லும் மாணவருக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டு வருதலும் பாராட்டத்தக்கதாகும். இச்சங்கம் க.பொ.த. தேர்வில் சிறப்புச் சித்தி பெறுபவர்களுக்கும், மற்றும் விளையாட்டு, இசை முதலான இணைப் பாடத் துறை சார்ந்த மாணவர்களுக்கும் **'ஊக்குவிப்புப் பரிசில்'** தொடர்ச்சியாக வழங்கி, மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக இசைத்துறைக் கல்வியை மேம்படுத்தும் வகையில், இச்சங்கதின் ஊடாகத் திரு. தம்மிப்பிள்ளை குடும்பத்தினர், தமது பிள்ளைகளான அன்பழகன், அறிவழகன் ஆகிய இருவரது நினைவாக இரு ஆண்டுகள் தொடர்ச்சியாக நிதியுதவி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துக் கல்லூரியின் முன்பாக நிறுவப்பட்டுள்ள கல்லூரி நிறுவுநர் திருவாளர் சயம்பு அவர்களின் சிலையின் மகிமை பற்றிக் காரைநகர் மக்கள் நன்கறிவர். இச்சிலை போர்க்காலச் சூழலினால் பேணப்படாத நிலையில் காணப்பட்டது. அதனை அழகுறப் புனருத்தாரணம் செய்வித்ததோடு, அதனைச் சுற்றி Brass வேலி அமைத்து அழகுபடுத்திப் பேணிவருதலும் இச்சங்கத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக அமைகிறது. இச்சிலைப் புனருத்தாரண வேலை முழுவதற்குமான நிதியுதவியை சங்க உறுப்பினரான தொழிலதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம் வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. **'சிறந்த பாடசாலைத் திட்டம்'** செயற் படுத்தப்படுவதற்கு இடவசதி அவசியமாயிற்று. அவ்வகையில் கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியருகிலுள்ள ஒன்பதரைப் பரப்பு நிலத்தை இந்துக் கல்லூரியின் பெயரில் வாங்கிக் கொடுத்து, பாடசாலைத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையிலும் உதவி செய்துள்ளனர்.

இன்றையத் தொழில் நுட்ப வளர்ச்சியும் பொருண்மிய வளர்ச்சியும் உலகத்தை ஒரே கிராமமாக மாற்றியுள்ளது. இதனடிப்படையில் சர்வதேசமெங்கும் பரந்து வாழும் காரைநகர் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களை ஓரணியின்கீழ்க் கொண்டுவந்து தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் 2013இல் karaihinducanada.com என்ற இணையத்தளத்தை தொடக்கியுள்ளமை காலவேகத்துடன் இணைந்து செல்லும் செயற் பாடாகும்.

போர்ச் சூழல்களாற் பாதிக்கப்பட்ட எத்தனையோ பிள்ளைகள் பராமரிப்பு அற்ற நிலையில் கல்வியை இழந்து வருகின்றனர். அவர் களது புனர்வாழ்வுக்காகவும், அவர்கள் கல்வியைத் தொடர்வதற்காகவும் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் ஈழத்தமிழர் மன்றங்களும் உறவுகளும் தொடர்ச்சியாகப் பணி செய்து வருகின்றன. இவ்வகையிலும் இச்சங்கம் தம் பணியை விரிவு படுத்துதல் வரவேற்கத்தக்கதாகும்.

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் 2012ஆம் ஆண்டு முதலாகத் தொடர்ச்சியாக 2013, 2014, 2015, 2016 ஆண்டுகளின் நிதியாண்டுக்கான வரவு -செலவு அறிக்கை களையும், செற்பாட்டு அறிக்கைகளையும் அச்சடித்து உறுப்பினர்வளுக்கு வழங்கி வந்துள்ளமை செயற்குழுவினரின் செயல் திறனையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்து கின்றன. இந்த ஆண்டு அறிக்கைகளைத் துணைக்கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

# பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினால் ஐந்து ஆண்டு காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த முக்கியமான பணிகளின் கோவை.

- மேலதிக மின்கட்டணம், இணையத்தளக் கட்டணம், விருந்தினர் உபசரணை உள்ளிட்ட பலதரப்பட்ட கல்லூரியின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு உதவியதன்மூலம் அதன் சுமுகமான செயற்பாடு உறுதிசெய்யப்பட்டது.

- தற்காலிக ஆசிரியர்கள், அலவலக முகாமைத்துவ உதவியாளர் ஆகியோரின் சம்பளக் கொடுப்பனவுகளுக்கான உதவி

- கல்விசாரா செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கு உதவியதுடன் இவற்றில் சாதனை ஏற்படுத்தியவர்களைப் பாராட்டி விழா ஒழுங்கமைக்கப்பட்டு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

- கல்லூரியின் 125வது ஆண்டு விழா மலர் வெளியீட்டிற்கான உதவி
(அனுசரணை: சங்க உறுப்பினர் மருத்துவக் கலாநிதி வி.விஜயரத்தினம்)

- கல்லூரியின் 125வது ஆண்டு விழா கனடாவில் வெகு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்தது.

- சயம்பு சிலையினைப் புனரமைத்து அழகுறச் செப்பனிட்டு அதன் அமைவிடத்திற்கு Brass வேலி அமைத்து அழகுபடுத்தப்பட்டது.
(அனுசரணை: சங்க உறுப்பினர் தொழிலதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம்)

- மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பாவனைக்கான சிற்றுண்டிச் சாலை நிறுவப்பட்டது.
(அனுசரணை: அமரர் திருவேங்கடம் நினைவாக அன்னாரது புதல்வன் உறுப்பினர் திரு.சந்திரசோதி)

- பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா ஒழுங்கமைக்கப்பட்டு ஊக்குவிப்புப் பரிசில்கள்வழங்கப்பட்டன.
(அனுசரணை: அமரர் S.P.சுப்பிரமணியம் நினைவாக அன்னாரது புதல்வன் உறுப்பினர் திரு.S.P.S. அரிகரன்)

- க.பொ.த.(சாதாரணம்) வகுப்பு மாணவர்கள் தவணைப் பரீட்சைகளில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டது.
(அனுசரணை: அமரர் S.P.சுப்பிரமணியம் நினைவாக அன்னாரது புதல்வன் உறுப்பினர் திரு.S.P.S. அரிகரன்)

- கல்லூரியின் இசை, ஓவியம் ஆகிய கற்கை நெறிகளின் மேம்பாட்டிற்கான உதவி
(அனுசரணை: உறுப்பினர்களாகவுள்ள தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் குடும்பம் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அமரர் அன்பழகன் அமரர் அருளழகன் ஆகியோரது நினைவாக).

- க.பொ.த.(சாதாரணம்), க.பொ.த.(உயர்தரம்) ஆகிய பரீட்சைகள் உள்ளிட்டு கல்விசார் செயற்பாடுகளில் சாதனை ஏற்படுத்திய மாணவர்களுக்கு பாராட்டு விழா ஒழுங்கமைக்கப்பட்டு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

- 2014ஆம் ஆண்டு பரிசில் தினத்திற்கான அனுசரணை வழங்கப்பட்டது. வடக்கு, தெற்கு வளாகங்களில் அலங்கார வளைவு அமைக்கப்படுவதற்கான பகுதி அனுசரணை வழங்கப்பட்டது.

- வடக்கு வளாகத்தின் வடக்கு, கிழக்கு எல்லைகள் வலைப்பின்னல் கம்பியினால் (Wire Mesh) பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

- சயம்பு மண்டபத்தின் நுழைவிடத்தில் சுருக்கு கேற் அமைப்பதற்கான உதவி.

- மகிந்தோதய ஆய்வுகூடத் திறப்பு விழாவிற்கான முழுமையான அனுசரணை வழங்கப்பட்டது.

- சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடனும் குழந்தை மருத்துவநிபுணர் வி.விஜயரத்தினம் அவர்களின் முழுமையான நிதிப் பங்களிப்புடனும் 25இலட்சம் ரூபா நிரந்தர வைப்பிலிடப்பட்டு 'மருத்துவக்கலாநிதி வி.விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

- பரிசில் தினத்தின்போது உறுப்பினர்களின் அனுசரணையுடன் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
  அனுசரணை:
  1. அமரர் சி.தம்பிராசா நினைவாக அன்னாரது பாரியார் திருமதி மனோன்மணி தம்பிராசா
  2. அமரர் திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி நினைவாக அன்னாரது புதல்வனும் மருமகளும் திரு. திருமதி சச்சிதானந்தம் சுந்தரேஸ்வரி தம்பதிகள்.
  3. அமரர் நா.கனகசுந்தரம் நினைவாக அன்னாரது புதல்வன் கனக.சிவகுமாரன்
  4. அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை நினைவாக அன்னாரது பெறாமகன் மா.கனகசபாபதி)

- வெள்ளி விழா அதிபர் அமரர் கலாநிதி ஆ.தியாகராசா அவர்களின் நூற்றாண்டு விழா கல்லூரியில் கொண்டாட அனுசரணை வழங்கப்பட்டது.

- ஆசிரியர் தினக் கொண்டாட்டத்திற்கான உதவி

- பிரதான வீதியுடனும் கல்லூரிக்கு அண்மித்தும் அமைந்துள்ள இரண்டரைப் பரப்புக் காணியும் வலந்தலைச் சந்திக்கு அண்மையாக பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஏழு பரப்புக் காணியும் கொள்முதல் செய்வதற்கு உதவப்பட்டது.

- வசதி குறைந்த க.பொ.த.(உயர்தரம்) தர மாணவி ஒருவரின் கல்விச் செயற்பாட்டிற்கு இரண்டு ஆண்டுகளுக்குத் தேவையான நிதி உதவி
  (அனுசரணை: உறுப்பினர் மாணிக்கம் கனகசபாபதி)

- கல்லூரியின் மேம்பாடு நோக்கி மூன்று இசை நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டிருந்தது

- கல்லூரியின் வெள்ளிவிழா அதிபர் அமரர் கலாநிதி.ஆ.தியாகராசா அவர்களின் நூற்றாண்டு விழா கனடாவில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதுடன் விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

- எமது சங்கத்தினை ஆரம்பிக்க உழைத்தவரும் ஆரம்பகாலத் தலைவருமான அமரர் சி. தம்பிராசா அவர்களின் 31வது நாள் நினைவு வணக்கக் கூட்டம் நடாத்தப்பட்டது.

- சர்வதேசமெங்கும் பரந்து வதியும் பழைய மாணவர்களை தொடர்புமிக்க உறுப்பினர்களாக இணைத்துக்கொள்ளும் திட்டம் தொடங்கப்பட்டது.

- karaihinducanada.com இணையத்தள சேவை தொடங்கப்பட்டு பாராட்டும்படியாக சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது

### பழைய மாணவர் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவரும் முன்னைநாள் அதிபருமாகிய திரு. பொன். சிவானந்தராஜா அவர்கள் 01-09-2012 இல் நடைபெற்ற சங்கத்தின் தொடக்கப் பொதுக் கூட்டத்திற்கு அனுப்பிவைத்திருந்த

# வாழ்த்துச் செய்தி

கல்லூரித் தாயின் பெயரால் மதிப்புடன் வாழும் கனடா வாழ் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களே!

எமது பாடசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய இந்த நன்னாளில், முதன் முதலாக ஆரம்பிக்கும் பழைய மாணவர்களின் ஒன்று கூடலில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், கல்லூரியின் பெயரால் உங்களுக்கு வணக்கம் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்வரும் வருடம் கல்லூரியின் 125 ஆவது ஆண்டாகும். கல்லூரித் தாயின் 125 வது பிறந்த நாளை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவதற்காகத்தான் கல்லூரித் தாய் இன்று கனடாவில் தனது மடியில் தவழ்ந்து, கல்வி கற்று, ஆற்றல்களை வெளிப்படுத்திய தன் பிள்ளைகளை ஒன்றிணைக்கின்றாளா என எண்ணத் தோன்றுகின்றது.

**அன்பான பழைய மாணவர்களே!**

நீங்கள் கல்வி கற்ற காலங்களில் எமது பாடசாலை நாட்டில் உள்ள பிரபல பாடசாலைகளுக்குச் சவாலாக விளங்கியதையிட்டு நீங்கள் மகிழ்வடைவீர்கள். இலங்கையில் தலை சிறந்த அதிபர்களைத் தன்னகத்தே கொண்டு இயங்கிய பாடசாலை என்பதில் நீங்கள் பொருமையடைவீர்கள். இக்கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் பிரகாசிப்பது வெள்ளிடைமலை. கல்லூரியின் பெருமையை உங்கள்முன் சொல்வதற்கு வார்த்தைகளில்லை. 125 வருடச் சாதனைகள் ஏராளம் ஏராளம்.

**கல்லூரியின் மேல் அன்பு வைத்துள்ள பழைய மாணவர்களே!**

திரு. கனக சிவகுமாரன், எனது ஆசான் மதிப்புமிக்க திரு. தம்பிராசா, திரு. S. K. சதாசிவம், திருமதி சோதிநாதன் கிருஸ்ணவேணி, திரு. மு. சு. வேலாயுதபிள்ளை போன்றோரின் தன்னலமற்ற முயற்சியால், ஆளுமையின் வெளிப்பாடாக இன்று கனடா - பழைய மாணவர் சங்கம் உதயமாகின்றது.

பழைய மாணவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தன்னலம் பாராது கல்லூரியின் வளர்ச்சி, ஊரின் வளர்ச்சி ஆகியவற்றை நோக்காகக் கொண்டு உதயமாகும் இச் சங்கத்திற்கு தமது பரிபூரண ஆதரவை வழங்க வேண்டுமென சிரம் தாழ்த்தி கைகூப்பி வேண்டிக் கொள்கின்றேன்.

உதயமாகும் இச்சங்கம் ஆல் போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, ஏனைய பழைய மாணவர் சங்கங்கட்கு முன்னுதாரணமாக விளங்கி, பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்து ஓர் கலங்கரை விளக்காக விளங்க வேண்டும் என வாழ்த்துவதுடன் இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு பாடசாலை அருகே அருள் பாலித்துக் கொண்டிருக்கும் மடத்துக்கரை அம்மனின் கடைக்கண் பார்வை கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல சக்தித் தாயை வேண்டுகின்றேன். அத்துடன் எதிர்வரும் 125ஆவது ஆண்டை வெகு சிறப்பாக கனடாவில் கொண்டாடி, பழைய மாணவர்கள் அனைவரும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

நல்லதையே சிந்திப்போம், நல்லதையே செய்வோம். இன்று கனடா வாழ் பழைய மாணவர்கள் கல்லூரிக் கொடியின் கீழ் ஒன்றாகக் காண்பதையிட்டு மிக மிக மகிழ்வடைகின்றேன்.

உதயமாகும் 'பழைய மாணவர் சங்கம்' என்னும் கற்பனைக்கெட்டாத இவ் அமைப்புக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பம் எனது வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகப் பெரும் அதிஷ்டம் என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"வளர்க எமது பாடசாலை. வாழ்க எமது ஊர்"

நன்றி

தங்கள்
அன்பின்
**பொ. சிவானந்தராஜா**

## பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்

# திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் அவர்கள்

# நிகழ்த்தியிருந்த தலைமையுரை

காரை மாதாவின் மடியிலும், அதன் அயற்கிராமத்திலும் பிறந்து, காரை இந்து அன்னையின் கையில் தவழ்ந்து, இன்று மேபிள் மர நிழலில் கூடியிருக்கின்றோம்.

காரைநகர் இந்துக் கல்லூரி 125 ஆண்டு கால பழைமை வாய்ந்த பல சாதனைகளைப் படைத்த யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல கல்லூரிகளுக்கு இணையான ஒரு முதன்மைப் பாடசாலை.

காரை இந்துவின் வரலாற்றில் இன்று ஒரு முக்கியமான நாள்.

காரை இந்துவின் புதல்வர்கள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், மலேசியாவிற்குச் சென்றிருந்தனர்.

அதன் பின்னர் 70களில் தரப்படுத்தலில் உயர் கல்வி வாய்ப்பு குறைக்கப்பட்ட நிலையில் உயர் கல்விக்காக இலண்டன் மாநாகருக்குச் சென்றிருந்தனர்.

அதன் பின்னர் 1977, 1983 ஜுலை இனப்படுகொலைகளை அடுத்து பெருமளவில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

ஆக ஒரு நூற்றாண்டு காலமாக காரை இந்துவின் புதல்வர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கல்லூரி வளர்ச்சிப் பணிகளில் அவ்வப்போது உதவி வந்திருக்கின்றார்கள். கொழும்பில் பழைய மாணவர் சங்கத்தின் கிளை இருக்கின்றது, இருந்த போதிலும் எந்த ஒரு வெளி நாட்டிலும் பழைய மாணவர் சங்கத்தின் கிளை அமைக்கப்படவில்லை.

புலம்பெயர் நாடொன்றில் கனடாவிலேயே முதன் முதலில் அதன் கிளை அமைக்கப்படுகிறது. அந்த வகையில் இன்றைய நாள் காரை இந்துவின் வரலாற்றில் மிகமுக்கியமான நாள்.

எவ்வாறு ஒரு அழகிய சிலையை வடிக்கும் போது உளியின் வலியை ஒரு சிற்பக் கலைஞன் தாங்குகின்றானோ. அவ்வாறே எத்தனையோ சவால்கள், எத்தனையோ தடைக் கற்கள், எவ்வளவோ வேதனைகள், எல்லா வற்றையும் தாண்டி இன்று இந்த இலக்கை அடைந் திருக்கிறோம்.



கல்லூரி அதிபர் திரு. பொன். சிவானந்தராஜா அவர்கள் ஒரு தனித்துவமான சுதந்திரமான பழைய மாணவர் சங்கத்தின் கிளை கனடாவில் அமைக்கப்பட வேண்டும் என்று எம்மை வேண்டிக் கொண்டதுடன் அதில் தொடர்ந்து உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தார். தாய்ச்சங்கத்தின் போசகர் திரு. எஸ்.கே. சதாசிவம் ஆசிரியர் அவர்கள் தொடர்ச்சியாக எம்முடன் தொடர்பில் இருந்து பொறுப்புடனும் நிதானத்துடனும் எம்மை வழிநடத்தினார். தாய்ச்சங்கத்தின் உறுப்பினர்களும் அதில் குறிப்பாக பட்டதாரி இளைஞர்கள் மிக விழிப்புடனும் உற்சாகத்துடனும் இருந்து பொறுமை காக்க வேண்டிய இடத்தில் பொறுமையாகவும், விரைந்து முடிவெடுக்க வேண்டிய இடத்தில் விரைந்தும் இந்த விடயத்தைக் கையாண்டு எமக்கு ஒத்துழைத்தார்கள்.

அறிவுடைமைக்கு அழகு துணிவுடைமை என்பார்கள். கல்லூரியின் தாய்ச்சங்கத்தினால் நியமிக்கப்பட்ட அமைப்புக் குழுவின் எட்டுப் பேரில் ஐந்து பேர் மிகவும் துணிவுடனும் நிதானத்துடனும் பயணித்தார்கள். அதில் குறிப்பாக கல்லூரியின் முன்னாள் உப-அதிபர் தம்பிராசா ஆசிரியர் அவர்கள் இடைக்கால நிர்வாக சபையின் ஆலோசகர் என்ற வகையில் மிகவும் பொறுமையுடனும் தெளிவுடனும் இருந்து உறுதியாக வழிகாட்டினார். நாம் கலங்கி நிற்கும் போது ஆறுதல் கூறி சாந்தமாக இருங்கள் என்று அமைதிப்படுத்துவார். அவர் எமது ஊர் சார்ந்த இனம் சார்ந்த எமது சைவசமயம் சார்ந்த பல விடயங்களில் ஆர்வமாக இருந்து தன்னால் இயன்றளவு சமூகமளித்து தனது பங்களிப்பை வழங்கி வந்தாலும் காரை இந்துக் கல்லூரி விடயத்தில் மட்டுமே தனது முழுமையான

பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

அடுத்து கல்லூரியின் பழைய மாணவரும் இளைப்பாறிய நிலஅளவையாளர் நாயகமும் ஆகிய திரு. மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள் வயதில் மூத்தவர் ஆனாலும் எமது தளபதி அவர்தான் என்று கூறலாம். உணர்ச்சி வசப்படாமல் கருத்துக்களை கருத்துக்களால் மோதுபவர். தர்க்க ரீதியாக கேள்விக் கணைகளைத் தொடுத்து சொல்லம்புகளை ஏவுவதில் வல்லவர். பல மணிநேரங்களைச் செலவிட்டு சங்கத்தின் யாப்பினை வரைந்தவர். பல சிரமங்களுக்கு மத்தியிலும் இந்தப் பணியில் உறுதியாக, ஈடுபட்டவர்.

அடுத்து இணைப்பாளர் திரு. கனக. சிவகுமாரன் அவர்கள். அவர் 'காரை இந்து பழைய மாணவர் சங்கம்' என்ற கருத்துருவாக்கம் வந்த நாளில் இருந்து பசி நோக்காது, கண்துஞ்சாது கடும் தவம் செய்தார் என்றே சொல்ல வேண்டும். காய்த்த மரம் கல்லடி படுவது வழமை. இவர்போன்ற தன்னலமற்ற மக்கள் செயற்பாட்டாளர்கள் சொல்லடிகளுக்கு தவறி விடுவதில்லை. அவற்றை எல்லாம் துணிவோடும், பொறுமையோடும் எதிர்கொண்டு இன்று இந்த இலக்கை அடைந்ததில் அவருக்குப் பெரும் பங்கு இருக்கின்றது.

மற்றும் திரு. அம்பலவாணர், திரு. சோதிநாதன் ஆகியோரும் தொடர்ச்சியாக உறுதியாக ஒத்துழைத்தார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வோம்.

இறுதியாக, ஓர் இனத்தின் இருப்பு காக்கப்பட வேண்டுமாக இருந்தால், அந்த இனத்தின் ஊர்கள் காக்கப்பட வேண்டும். ஊர்கள் காக்கப்பட வேண்டுமாக இருந்தால் ஊர்மக்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கு கல்விக் கூடங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் கல்விக் கூடங்கள் வளர்ச்சி அடைவதற்கு இவ்வாறான பழைய மாணவர் சங்கம் அவசியம். அதுவும் 125 ஆண்டு கால பழமை வாய்ந்த எத்தனையோ கல்விமான்களை உருவாக்கிய யாழ் மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளுக்கு இணையான ஒரு முதன்மைப் பாடசாலைக்கு மிக மிக அவசியமாகிறது.


அமையப் போகின்ற பழைய மாணவர் சங்கம் காரை இந்து அன்னையின் துதி பாடும், தூக்கி விடும் என்று திடமான நம்பிக்கை இருக்கின்றது.

இந்த நேரத்தில், காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா வாழ் காரைநகர் மக்களை ஒன்றிணைத்து கடந்த 23 ஆண்டு காலமாக இயங்கி வரும் ஒரே ஒரு மன்றம் கனடா-காரை கலாச்சார மன்றம் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இதில் நாம் எல்லோரும் உறுப்பினர்களாக இருக்கின்றோம்.

கனடா-காரை கலாச்சார மன்றமும், காரை இந்து பழைய மாணவர் சங்கம் கனடாவும் ஒன்றுக் கொன்று புரிந்துணர்வுள்ள சகோதர உறவுடன் இருக்கும். ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தாது என்பதைத் தெளிவு படுத்த விரும்புகின்றேன். இங்கு வந்திருக்கும் காரைநகரைச் சேர்ந்த காரை இந்துவின் பழைய மாணவர்கள் கனடா-காரை கலாச்சார மன்றத்திலும் உறுப்பினர்களாக இன்னும் சேராதவர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும். அதன் அனைத்து நிகழ்வுகளிலும் பொதுக் கூட்டத்திலும் பங்கு பற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதியாக காரை இந்து பழைய மாணவர் சங்கம்-கனடாவானது எமக்கு அறிவையும் பண்பையும் ஊட்டி வளர்த்த காரை இந்து அன்னையின் புகழ் வானுயர வளர்வதற்கும் தன்மானமுள்ள தமிழ் மகளாக தலை நிமிர்ந்து நிற்பதற்கும் உறுதுணையாகப் பணியாற்ற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்துறை சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப் பெருமானை வேண்டி எனது உரையை முடிக்கின்றேன்.

செப்ரம்பர். 1. 2012


" செய் அல்லது செத்து மடி"
www.karainews.com
" எனது ஊர் காரைநகர் " கலாண்டு சஞ்சிகை - கனடா

# நினைவூட்டும் வரலாற்று நினைவுகளின் ஒளிப் படங்கள்

## கல்லூரியின் 125வது ஆண்டு விழா




















PROPOSED PLAN FOR OVERHEAD PEDESTRIAN CROSSING OF HINDU COLLEGE
KARAINAGAR.
ELAKADY, VALANTHALAI, KARAINAGAR / CANADA
DATE :- APRIL 14, 2018
(THIS IS not in SCALE)
DESINGED AND DRAWN BY:-
SELVARATNAM - SELVANAYAGAM.



கலைமாமணி திருமதி பூஷணி கல்யாணராமனின் இசைக் கச்சேரி



யாழ். பல்கலைக்கழக மூத்த இசைத்துறை விரிவுரையாளர் திருமதி பரமேஸ்வரி கணேசனின் இசைக் கச்சேரி



சுப்பர் சிங்கர் சாயி விக்னேஷின் இசைக் கச்சேரி



அமரர் கலாநிதி ஆ. தியாகராசா அவர்களின் நூற்றாண்டு விழா



சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவர் அமரர் சி. தம்பிராசா அவர்களின் நனைவு வணக்கக் கூட்டம்



நிர்வாகசபை (2014-2015)





karaihinducanada.com இணையத்தள சேவையின் தொடக்க நிகழ்வு





கனடா கிளையின் உதவியுடன் கல்லூரிக்காகன காணிக் கொள்வனவு



நிர்வாகசபை (2012–2013)



நிர்வாகசபை (2013–2014)

# நடப்பு நிர்வாக சபை (2016–2018)



போசகர்
தி. விசுவலிங்கம்



தலைவர்
த. அம்பிகைபாகன்



செயலாளர்
கனக. சிவகுமாரன்



பொருளாளர்
மா. கனகசபாபதி



உப தலைவர்
நா. குஞ்சிதபாதம்



உதவிச் செயலாளர்
திருமதி சி. செல்வ இந்திராணி



உதவிப் பொருளாளர்
ந. பிரகலாதீஸ்வரன்



உறுப்பினர், இணையத்தள நிர்வாகி
திருமதி சோ. கிருஷ்ணவேணி



உறுப்பினர்
திருமதி ர. பிரபா



உறுப்பினர்
தி. சந்திரசோதி



உறுப்பினர்
க. சிவபாதசுந்தரம்



உறுப்பினர்
செ. சிவானந்தன்



கணக்காய்வாளர்
மு. வேலாயுதபிள்ளை



ஐக்கிய அமரிக்கா இணைப்பாளர்
க. தர்மராசா



ஒட்டாவா இணைப்பாளர்
திருமதி மு. சந்திரா



மொன்றியல் இணைப்பாளர்
திருமதி சிறீகணேசர் செல்வதி





5வது ஆண்டு விழாவில் இசைக் கச்சேரியை வழங்கும் பொருட்டு ரொறன்ரோ விமான நிலையத்தை வந்தடைந்த சுப்பர் சிங்கர் ஷ்ரவண் அவர்களைச் சங்க நிர்வாகிகள் வரவேற்றல்

## நிர்வாக சபை 2012-2013

போசகர்: திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை

தலைவர்: திரு. சின்னத்தம்பி தம்பிராசா

உப-தலைவர்: திரு. தம்பையா அம்பிகைபாகன்

செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்

உதவிச் செயலாளர்: திருமதி. ஸ்ரீலதா மனோராகவன்.

பொருளாளர்: திரு. ஆறுமுகம் சோதிநாதன்.

உதவிப் பொருளாளர்: நடராசா பிரகலாதீஸ்வரன்

**நிர்வாக உறுப்பினர்கள்:**

திருமதி. செல்வ இந்திராணி சித்திரவடிவேல்

திரு. ராசரத்தினம் சத்தியசீலன்

திரு. மாணிக்கம் கனகசபாபதி

திரு. நாகராசா பாலசுப்பிரமணியம்

திரு. கனகேந்திரம் உமைபாகன்

கணக்காய்வாளர: திரு. கந்தப்பு அம்பலவாணர்

## நிர்வாக சபை 2013 - 2014

போசகர்: திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை

தலைவர்: திரு. சின்னத்தம்பி தம்பிராசா

உப-தலைவர்: திரு. தம்பையா அம்பிகைபாகன்

செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்

உதவிச் செயலாளர்: திரு. கனகரட்ணம் சிவபாதசுந்தரம்

பொருளாளர்: திரு. ஆறுமுகம் சோதிநாதன்.

உதவிப் பொருளாளர்: நடராசா பிரகலாதீஸ்வரன்

**நிர்வாக உறுப்பினர்கள்:**

திருமதி. செல்வ இந்திராணி சித்திரவடிவேல்

திரு. ராசரத்தினம் சத்தியசீலன்

திரு. மாணிக்கம் கனகசபாபதி

திரு. நாகராசா பாலசுப்பிரமணியம்

திரு. கனகேந்திரம் உமைபாகன்

கணக்காய்வாளர: திரு. கந்தப்பு அம்பலவாணர்

**பிரதேச இணைப்பாளர்கள்:**

மொன்றியல்: திருமதி செல்வதி ஸ்ரீகணேசர்

ஒட்டாவா: திரு. பொன்னம்பலம் வெற்றிவேலு

இணையத்தள நிர்வாகி: திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்

## நிர்வாக சபை 2014-2015

போசகர்: சிவநெறிச் செல்வர் திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம்

தலைவர்: திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை

உப-தலைவர்: திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தம்

செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்

உதவிச் செயலாளர்: திருமதி. செல்வஇந்திராணி சித்திரவடிவேல்

பொருளாளர்: திரு. நடராசா பிரகலாதீஸ்வரன்

உதவிப் பொருளாளர்: திரு. மாணிக்கம் கனகசபாபதி

**நிர்வாக உறுப்பினர்கள்:**

திரு. தம்பையா அம்பிகைபாகன்

திரு. நாகலிங்கம் குஞ்சிதபாதம்

திரு. கனகரட்ணம் சிவபாதசுந்தரம்

திரு. நாகராசா பாலசுப்பிரமணியம்

திருமதி. சுந்தரேஸ்வரி சச்சிதானந்தம்

கணக்காய்வாளர்: திரு. கந்தப்பு அம்பலவாணர்

**பிரதேச இணைப்பாளர்கள்:**

மொன்றியல்: திருமதி செல்வதி ஸ்ரீகணேசர்

ஒட்டாவா: திருமதி சந்திராதேவி முத்துராசா

ஐக்கிய அமெரிக்க இராச்சியம்: திருமதி இந்திராதேவி பரஞ்சோதி

இணையத்தள நிர்வாகி: திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்

இணையத்தள தொழில்நுட்ப உதவி: திரு. குலசேகரம் விமலராசா

## நிர்வாக சபை 2015 - 2016

போசகர்: சிவநெறிச்செல்வர் திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம்

தலைவர்: திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை

உப-தலைவர்: திருமதி. அனுசூயா ஞானகாந்தன்

செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்

உதவிச் செயலாளர்: திருமதி. செல்வா இந்திராணி சித்திரவடிவேல்

பொருளாளர்: திரு. மாணிக்கம் கனகசபாபதி

உதவிப் பொருளாளர்: திரு. திரு. நடராசா பிரகலாதீஸ்வரன்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**

திரு. நாகலிங்கம் குஞ்சிதபாதம்

திரு. திருவேங்கடம் சந்திரசோதி

திரு. சிவபாதசுந்தரம் கனகரட்ணம்

திருமதி பிரபா ரவிச்சந்திரன்

திரு. மகானந்தன் சிவானந்தன்

கணக்காய்வாளர்: திரு.கந்தப்பு அம்பலவாணர்

**பிரதேச இணைப்பாளர்கள்:**

மொன்றியல்: திருமதி செல்வதி ஸ்ரீகணேசர்

ஒட்டாவா: திருமதி சந்திராதேவி முத்துராசா

ஐக்கிய அமெரிக்க இராச்சியம்: திருமதி இந்திராதேவி பரஞ்சோதி

இணையத்தள நிர்வாகி: திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்

# பழைய மாணவர் சங்கத்தின் 5வது ஆண்டு விழா சிறப்புற்று விளங்க உதவிய நல்லுள்ளங்களுக்கு சங்க நிர்வாகம் சிரம் தாழ்த்தி நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

மங்கள விளக்கேற்றி வைத்து மங்களகரமாக விழாவை ஆரம்பித்து வைத்த பெரியோர்கள்

இறை வணக்கம் தமிழ்மொழி வாழ்த்து கனேடிய தேசியப் பண் ஆகியவற்றை அழகுற இசைத்த சிறுமிகளான பிரணவி பஞ்சலிங்கம், வர்ணவி பஞ்சலிங்கம்

கல்லூரிப் பண்ணுக்கு நடனத்தை அமைத்ததுடன் அதனை சிறப்புற வழங்கிய 'நடனகலாபாரதி', 'நாட்டியக்கலைமணி' செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல்

பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு விழாவினை மேன்மைப்படுத்தியதுடன் கல்லூரி அன்னைக்கு பெருமை சேர்த்த மருத்துவக்கலாநிதி இராமலிங்கம் செல்வராஜா அவரது துணைவியார் மருத்துவக்கலாநிதி சறோ செல்வராஜா

தமிழகத்திலிருந்து வருகைதந்து அற்புதமான இசை நிகழ்ச்சியை வழங்கி மகழ்வித்த சுப்பர் சிங்கர் R.P.ஷ்ரவண். இவரது இசைக்கு மெருகூட்டும் வகையில் வயலின் இசைத்த வயலின் வித்துவான் ஜெயதேவன் நாயர், மிருதங்கம் வாசித்த 'மிருதங்க கலாவித்தகர்' ரதிரூபன் பரஞ்சோதி, கடம், தபேலா ஆகியனவற்றை வாசித்த திரு.நரேந்திரா தில்லையம்பலம்

கல்லூரியின் மேம்பாட்டிற்கான நிதி வளத்தை பெருக்கல் என்கின்ற எமது இலக்கை அடைவதற்கு அனுசரணை வழங்கி ஊக்குவித்த

**Platinum** அனுசரணையாளர்களான குழந்தைகள் மருத்தவ நிபுணர் மருத்துவக் கலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம், தொழிலதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம், மருத்துவக் கலாநிதி இராமலிங்கம் செல்வராஜா, பொறியியலாளர் திரு.மகேஸ்வரன் பாலசுப்பிரமணியம், வீடு விற்பனை முகவர் திரு கண்ணன் நடராசா

**Gold** அனுசரணையாளர்களான Olympic Wood அதிபர் திரு.ஹரன் பஞ்சலிங்கம், பொறியியலாளர் (Texas, USA) திரு.சிற்றம்பலம் திருஞானசம்பந்தன், சுவிற்சலாந்து Siva Travel அதிபர் திரு.சிவா கனகசுந்தரம், பிரான்ஸ் VS.CO Cash & Carry நிறுவன அதிபர் திரு. சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் (சந்திரன்), பழைய மாணவன்(லண்டன்) திரு.யசோதரன் கிருபானந்தம்

**Silver** அனுசரணையாளர்களான வீடு விற்பனை முகவர் திரு.ராஜ் நடராசா, வீடு விற்பனை முகவர் திரு.ரவி ரவீந்திரன், Andy Auto அதிபர் திரு.அன்டி திருச்செல்வம், காசிப்பிள்ளை சக புத்திரர்கள் நிறுவன அதிபர் திரு.மு.காசிப்பிள்ளை, பல்வைத்திய நிபுணர் இரு.விஜயநாதன், நலன்விரும்பி திரு.கணபதிப்பிள்ளை சிவபாதசுந்தரம், karainews.com இணையத்தளத்தின் தொகுப்பாளர் திரு. பிரமேந்திரதீசன் திரவியநாதன்

இம்மலரில் இடம்பெற்ற கட்டுரையை எழுதி உதவிய பேராசிரியர் இ.பாலசுந்தரம், மறு பிரசுரம் செய்த கட்டுரையை வழங்கி உதவிய கலாநிதி த.ரவிச்சந்திரன் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வழங்கி ஊக்குவித்த கல்லூரியின் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் உள்ளிட்ட அனைத்து அன்பர்கள்

இச்சிறப்பு மலரினை அழகுற வடிவமைத்த திரு.மா.கனகசபாபதி, அழகுற அச்சிட்ட graphicland அச்சகம்

விளம்பர அனுசரணை வழங்கி ஆதரவளித்த வர்த்தகப் பெருமக்கள், மலரின் பக்கம் ஒன்றினை பொறுப்பேற்றுக்கொண்டு வாழ்த்தி ஆதரவளித்த பழைய மாணவர்கள்

இலவசமாக புகைப் படங்கள் எடுத்து உதவிய K.K.Electronics நிறுவனத்தின் திருமதி மலர் குழந்தைவேலு

துல்லியமான ஒலி அமைப்பினை ஏற்படுத்தி ஒத்துழைத்த திரு.யதுநந்தன் (யது)

மண்டப ஏற்பாடுகளில் ஒத்துழைத்து உதவிய ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய நிர்வாகம்

நிகழ்வில் பணியாற்றிய தொண்டர்கள்

நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு ஆதரவளித்ததுடன் விழாவிலும் கலந்துகொண்டு கல்லூரி அன்னையைப் பெருமைப்படுத்திய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்

விளம்பரம் செய்ததுடன் ஷ்ரவணை நேர்காணல் செய்து விழாவின் ஏற்றத்திற்கு உதவிய CTBC அதிபர் இளையபாரதி

சமூக அறிவித்தல் பகுதியில் எமது விளம்பர அறிவித்தலை ஒலிபரப்பி ஆதரவளித்த வானொலி மற்றும் தொலைக் காட்சி நிறுவனங்கள்

விழா நிகழ்ச்சிகளை அழகுறத் தொகுத்து வழங்கிய திரு.பா.ஞானபண்டிதன்

மேற்குறித்த நன்றிக்குரிய உள்ளங்களின் பட்டியலில் எமக்கு உதவிய எவராவது விடுபட்டிருந்தால் அவர்கள் அதனை பெருமனத்துடன் மன்னித்துக்கொள்வார்கள் என நம்புவதுடன் மீண்டும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

நிர்வாகம்
பழைய மாணவர் சங்கம், கனடா.

*With the best wishes*
*from*

# Dr. V. Vijayaratnam, M.D.

**FRCP, M.R.C.P.(UK), D.C.H.(Lond), D.C.C.H.(Edin.)**
**Pediatrics, Gastroenterology and Nutrition**



## Two Locations to Serve You

**DOWNTOWN**
600, Sherbourne Street, Suite 711
Toronto, ON. M4X 1W4
**TEL: 416-929-0929**

**SCARBOROUGH**
3430, Finch Avenue East
Scarborough, ON. M1W 2R5
**TEL: 416-496-1990**


BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE
Kannan Nadarajah
416-889-1083
nthayakaran@yahoo.com
I have been recognized as top 5% sales representatives in Canada
வீடு
வாங்க
விற்க
HAPPY HOME TEAM
Happy Home
HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr., Suite 205, Markham, ON. L3S 4N8
*Independently Owned and Operated Realtor
HOMELIFE
HIGHER STANDARDS
BUS: 905 201 9977
FAX: 905 201 9229